வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk

மலர் : 04 | 13.01.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 35 | பக்கங்கள் : 16




## டிவகலாலா காலமானார்!



யாழ்ப்பாணம், ஜன. 13

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் கல்வி, கலாசார, விளையாட்டுத் துறை அமைச்சின் முன்னாள் செயலாளரும் சிறந்த கல்விமானுமான - தமிழ் பற்றாளருமான சுந்தரம் டிவகலாலா (வயது 81) நேற்று காலை யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் இல்லத்தில் காலமானார்.

யாழ். இந்துக் கல்லூரியிலும் பின்னர், பேராதனை பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்ற அவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஆறுதல் தொண்டு நிறுவனம் மூலம் முன்பள்ளித் துறையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டிருந்தார். சிறந்த நிர்வாகியாகவும், ஆளுமையாளராகவும் பெயர்பெற்ற அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக நீண்ட காலம் இருந்தார்.

தமிழ் மொழி பற்றுமிக்கவரான இவர், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திலும் நெருங்கிய ஊடாட்டம் கொண்டவராகத் திகழ்ந்திருந்தார். இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தின் கல்வி செயலராக இருந்த இவர் போர் காலத்தில் மக்களுக்கு பெரும் தொண்டாற்றினார். அக் காலத்தில் கல்வி பெறுபேறு

15





# ஒற்றுமைப்படாமல் நழுவியது தமிழரசு

## மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி

முல்லைத்தீவு, ஜனவரி 13

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்படுவதாக உண்ணா விரத போராட்டக்காரருக்கு வழங்கிய உறுதிமொழி ஆவணத்தில் கையொப்பமிடாமல் இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நழுவிச் சென்றுள்ளார். அவரின் இந்த நழுவல், அவ்விடத்தில் கூடியிருந்த தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் - பொதுமக்கள் மத்தியில் தமிழரசு கட்சி மீது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

15

## விபத்தில் முதியவர் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 13

அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஓய்வூதியத்தைப் பெறுவதற்காக வங்கிக்கு சென்றவரை மோதியதில் முதியவர் உயிரிழந்தார்.

திருநெல்வேலி - பலாலி வீதி யில் மக்கள் வங்கி முன்பாக நேற்று வியாழக்கிழமை

15

## எந்த கட்சியுடனும் கூட்டணி இல்லை!

### த. தே. ம. முன்னணி

யாழ்ப்பாணம், ஜன. 13

மாவீரர்களின் தியாகங்களுக்கு புறம்பாக செயல்படுகின்ற எவரோடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேச்சு நடத்தவோ அல்லது இணைந்து செயல்படவோ போவதில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க. சுகாஸ் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் இதுவரை காலமும் திரைமறைவில் பதவிகளுக்கு

15

## புதிய தமிழ் தேசிய கூட்டமைப்பு நாளை புரிந்துணர்வு ஒப்பந்தம்!

யாழ்ப்பாணம், ஜன. 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான புளொட், ரெலோ கட்சிகளும், புதிதாக இணையவுள்ள கட்சிகளும் நாளை சனிக்கிழமை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளன என்று அறிய வருகிறது.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் மண்டபம் ஒன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ, த. சித்

15

## மண்டைதீவில் நூறு ஏக்கரில் சர்வதேச தரத்தில் மைதானம்!

யாழ்ப்பாணம், ஜன. 13

மண்டைதீவில் நூறு ஏக்கரில் சர்வதேச விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை விரைவில் ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண இளைஞர், யுவதிகளுக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை ஏற்படுத்தும் மாகாணமட்ட கலந்துரையாடல் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க தலைமையில் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

வடக்கு

15



### ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

## மைத்திரிபால ரூ.100 மில்லியன் நட்ட ஈடாக செலுத்தவேண்டும்!

### உயர்நீதிமன்றம் நேற்று அதிரடி தீர்ப்பு

கொழும்பு, ஜன. 13

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு 100 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பொலிஸ்மா அதி

15

## புதிய மின் கட்டணம் பெப். 15 முதல் அமுல்!

கொழும்பு, ஜன. 13

புதிய மின் கட்டண திருத்தம் எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது என்று மின்சார சபை தெரிவித்துள்ளது. அது வரை கடந்த முதலாம் திகதி முதல், அமைச்சரவை அனுமதியளித்த மின்சார கட்டண

15

## இந்தியாவின் ஜெய்சங்கர் யாழ்ப்பாணம் வருகிறார்?

கொழும்பு, ஜன. 13

இந்திய நிதியுதவியில் அமைக்கப்பட்ட யாழ். கலாசார நிலையத்தின் திறப்பு விழாவில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் பங்கேற்பார் என்று எதிர்பார்ப்பதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ். கலாசார நிலையம்

15

## தேர்தலுக்கான நிதி தடையின்றி வரும்!

### திறைசேரி வாக்குறுதி

கொழும்பு, ஜன. 13

தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை தடங்கலின்றி பெற்றுக்கொடுக்க முடியும் என திறைசேரி அதிகாரிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உறுதிப்படுத்தியுள்ளனர்.

15

## எங்கள் அரசியல் போராட்டத்துக்கு தமிழகம் ஆதரவளிக்க வேண்டும்!

### சென்னையில் சுமந்திரன் எம். பி.

சென்னை, ஜன. 13

75 வருட கால போராட்டத்துக்கு முற்றுப்புள்ளியை இந்த ஆண்டு ஏற்படுத்துவதற்காக முயன்று வருகின்றோம். அவ்வாறான நிலையில் எங்கள் அரசியல் போராட்டத்துக்கு தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் உள்ளிட்ட அனைத்து தலைவர்களும் பேராதரவு அளிக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் சென்னையில்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

மாவை சேனாதிராசா பற்றி பல தடவைகள் இந்தப் பத்தியில் எழுதியிருக்கின்றேன். அவரின் தலைமை பற்றி அண்மைக் காலமாக கவலை வெளியிட்டு வருவதைக் கவனித்த நண்பர் ஒருவர், 'மாவையின் புகழ் பாடிக்கொண்டிருந்த நீங்கள், இப்போது ஏன் அவரைத் தொடர்ந்து இப்படி விமர்சிக்கிறீர்கள்' என்று கேள்வி எழுப்பினார்.

'மாவை என்ற அரசியல் போராளிமீது இந்த ஊர்க்குருவிக்கு எப்போதும் ஓர் அபிமானம் உண்டு. ஆனால், அவரின் தலைமை இன்று பல இழப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றது. அவர் பல சந்தர்ப்பங்களில் ஓர் ஆளுமையுள்ள தலைவராக நடந்துகொள்ளாததால், தமிழரசுக் கட்சி இன்று பல இழப்புகளை சந்தித்திருக்கின்றது. அதனை சொல்லாமலும் இருக்கமுடியவில்லை' என்று நண்பருக்கு சொல்லவேண்டியதாயிற்று.

அவர் தமிழ் மக்களின் இருப்புக்கு ஆபத்து வரும்போது எந்தவித விட்டுக்கொடுப்புக்கும் இணங்கக்கூடியவர் அல்ல. அதனால்தான், அவரைப்பற்றி சொல்ல வேணடிய இடத்தில் சொல்லி வந்திருக்கின்றோம்.

இப்போது தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக ஒற்றுமைப்பட வேண்டிய நேரம் என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்காது. ஆனால், இப்போது தமிழரசுக் கட்சி, ஏற்கனவே இருந்த ஒற்றுமையையும் குலைத்துக்கொண்டு தனிவழி செல்ல முடிவெடுத்திருப்பது அந்தக் கட்சி மீது தமிழ் மக்கள் மத்தியில் கோபத்தையும் சினத்தையும் ஏற்படுத்திவிட்டது என்பது இரண்டு நாள்களின் நிலைமைகளை அவதானிக்கும்போதே தெரிகின்றது.

உள்ளூராட்சி தேர்தல் முறையில் தவறுகள் இருக்கின்றன என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்காது. ஆனால், அதனை காரணம்காட்டி, வெறுமனே உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தை மட்டும் இலக்குவைத்து ஒரு கட்சி பிரிந்து நிற்க முற்படுவது தமிழ் மக்களிடத்தில் கடும் விசனத்தை ஏற்படுத்திவிட்டது.

கடந்த, 2018 உள்ளூராட்சி தேர்தலில் மகிந்தவின் பொது ஜன பெரமுன ஐம்பத்து ஐந்து இலட்சம் வாக்குகளை பெற்றிருந்தது. தெற்கில் எல்லா சபைகளிலும் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற போதிலும், அதுகூட பல சபைகளில் நிலையான ஆட்சியை நடத்த முடியவில்லை. ஆனாலும் ஐம்பத்து ஐந்து இலட்சம் மக்களின் ஆணையை பெற்றதைப் பற்றியே உலகம் பேசியது.

அதேபோல, கூட்டமைப்பு அதிகூடிய வாக்குகளைப் பெற்றாலே போதுமானதுதான். அதற்காக சபைகளை ஆட்சி செய்வது என்பது இரண்டாம் பட்சமானதே.

தமிழரசு கட்சியே சொன்னதுபோல விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்படியான ஒரு சில்லறை தேவைக்ககாக ஆரம்பிக்கப்பட்டதல்ல. அது, தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் ஆன்மாவின் குறியீடாக ஒன்றிணைக்கப்பட்ட ஒரு பெரும் கூட்டியக்கம்.

அத்தகைய மகத்துவம் பொருந்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசு கட்சி இப்போது எதற்காக வெளியேறியது என்பது குறித்து நேற்றைய தினம் இந்தப் பத்தியில் பார்த்திருந்தோம்.

ஆனால், மட்டக்களப்பில் நடந்து முடிந்த தமிழரசு கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் அந்தக் கட்சி தனித்துப் போட்டியிடவேண்டும் என்று பலரும் வலியுறுத்தி கருத்துத் தெரிவித்தனர். அவரவருக்கு, தத்தமது பிரதேச சபைகளின் ஆட்சி மாத்திரம் இலக்கு அல்லாமல், அதனூடாக தத்தமது எதிர்கால அரசியல் இருப்பை உறுதி செய்வதும் இலக்காக இருந்திருக்கலாம்.

அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, அனைத்தையும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கடைசியில் பேசிய வார்த்தைகள் அங்கு பலரையும் புருவங்களை உயர்த்த வைத்திருக்கின்றன.

தந்தை செல்வா காலத்திலிருந்து தமிழ் மக்களின் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமைக்காக உழைத்தவர்களில் மாவை முக்கியமானவர். இன்று அரசியலில் முன்னணியில் இருக்கின்ற பலர் அந்தக் கலத்தில் எங்கே எப்படி இருந்தார்கள் என்பதும் மக்களுக்குத் தெரியாததல்ல.

ஆனால், தமிழரசின் அன்றைய மத்தியகுழு கூட்டத்தில் மாவை ஆற்றிய உரை பற்றி அந்த கூட்டத்தில் கலந்துகொண்ட சிலர் உணர்ச்சிப் பெருக்கொடு என்னிடம் பகிர்ந்துகொண்டனர்.

'தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற ஒற்றுமையே அவசியமானது என்பது எமது இனத்தின் வரலாறு நெடுகிலும் உணரப்பட்டுள்ளது. அதனாலேயே, தந்தை செல்வா காலத்திலிருந்து ஒற்றுமையையே எமது கட்சி வலியுறுத்தி, அதற்காக உழைத்தும் வந்திருக்கின்றது. ஆனால், இன்று நீங்கள் தமிழரசு தனித்துப் போட்டியிடவேண்டும் என்று உங்களது தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தி முடிவெடுத்துள்ளீர்கள். அது எத்தகைய பாரதூரமான வரலாற்றுத் தவறு என்பதை காலம் உங்களுக்கு ஒருநாள் உணர்த்தும். அதனை நீங்கள் உணருகின்றபோது நான் உயிரோடு இருக்க மாட்டேன். இங்கிருக்கின்ற எங்களில் சிலரும் இருக்கமாட்டோம்.'

- குரல் தளதளக்க மாவை ஆற்றிய அந்த இறுதி உரையை அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவர், குரல் தளதளக்க என்னிடம் தெரிவித்தார்.

**- ஊர்க்குருவி**

# ஜனநாயகத்துக்கு உயிர்கொடுக்க பாராளுமன்ற தேர்தலை நடத்துக!

### சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு

வடமராட்சி, ஜன. 13

இலங்கையில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையில் ஜனநாயகத்துக்கு உயிர் கொடுக்க வேண்டுமானால், உள்ளூராட்சி தேர்தலுக்கு முன் பாராளுமன்ற தேர்தல் நடத்துவது மிக முக்கியமானதாகுமென சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் யாழ். மாவட்டத் தலைவர் க. ஆனந்தகுமாரசாமி கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

அறகலய மக்கள் புரட்சி எழுச்சியால் இலங்கை மக்கள் என்றுமே கண்டிராத நிகழ்வு இலங்கையின் ஜனாதிபதி கோட்டபாய நாட்டை விட்டு ஓடி இராஜினாமா செய்த வரலாறு.

இதனால் இலங்கையின் ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டு விட்டது. இன்றைய இக்கட்டான நிலையில் ஜனநாயகத்துக்கு உயிர் கொடுக்கவேண்டுமானால் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவது முக்கியமானதாகும் - என்றார். (ஐ-02)

# ஜே.ஆரின் கொள்கையை ரணில் பின்பற்றுகின்றார்

### நாலக கொடஹேவா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 13

தேர்தலை நடத்தாமல், பலவந்தமான முறையில் அதிகாரத்தில் இருக்க முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவின் கொள்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்பற்றுகிறார். தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அரசாங்கம் அழுத்தம் பிரயோகிப்பது அரச நிர்வாக அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை ஊடாக பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்தலை ஏற்கும் பணிகளில் இருந்து விலகுமாறு அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் சகல மாவட்ட செயலாளர்களுக்கும் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார். இந்த தீர்மானத்தை அமைச்சரவை எடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சுற்றறிக்கைக்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு பதிலடி கொடுத்துள்ளது. ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கு அமைய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே கட்டுப்பணம், வேட்புமனுக்கள் ஆகியவற்றை பொறுப்பேற்கும் நடவடிக்கையில் அரச அதிகாரிகள் ஈடுபட வேண்டும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடும் அரச அதிகாரிகளுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் அரசாங்கம் செயல்படுகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட அரசாங்கம் பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன 1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேர்தலை நடத்தாமல் பலவந்தமான முறையில் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள முயற்சித்தார். இறுதியில் விளைவு பாரதூர மாக அமைந்தது. ஜே.ஆர் ஜயவர்தனவின் கொள்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்பற்றுகிறார். விளைவு பாரதூரமானதாக அமையும்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மைக்கு அரசாங்கம் கடும் அழுத்தம் பிரயோகிக்கிறது என்பது அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சிமன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் வெளியிட்ட சுற்றறிக்கை ஊடாக வெளிப்பட்டுள்ளது. தேர்தலை பிற்போட எவ்வழிகளிலும் இடமளிக்க முடியாது-என்றார்.

# நூலக நிறுவனத்தின் இணைய கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், ஜன. 13

நூலக நிறுவனத்தால் நிகழ்த்தப்படும் இணையவழி நிகழ்ச்சி தொடர் வரிசையில் 63ஆவது நிகழ்வாக "வடபுல தமிழ்ச் சூழலில் குயர் மக்கள்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடகக் கற்கைகள் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றும் அனுதர்ஷி கபிலன் நிகழ்த்தவுள்ளார். ஒருங்கிணைப்பாளராக சுஜீவன் தர்மரத்தினம் செயல்படுவார்.

இந்தக் கலந்துரையாடலில் சூம் செயலியில் 81415584070 என்ற அடையாள எண்ணைப் பயன் படுத்தி இணைய முடியும். (ஐ)

# தங்கத்துக்கு பதிலாக பித்தளையில் தாலி செய்து கொடுத்தவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், ஜன. 13

தங்கத்தக்குப் பதிலாக பித்தளையில் தாலிக்கொடி செய்து கொடுத்து மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு தாலியும் கொடியும் என்பவற்றை ஐந்தரை பவுணில் செய்தவற்கு சந்தேகநபரிடம் பணம் கொடுத்து தாலி மற்றும் கொடியை செய்து பெற்றுக்கொண்டுள்ளனர்.

7 வருடங்களின் பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னரே தமது தாலி மற்றும் கொடி என்பவை தங்கம் அல்ல பித்தளை என்பதை கண்டறிந்துள்ளனர்.

அது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் சந்தேக நபர் தலைமறைவாகி இருந்தார்.

இந்நிலையில் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் தலைமறைவாகி இருந்த சந்தேக நபரை கைது செய்து, மேலதிக விசாரணைக்காக தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ஐ-03)

# பெண் ஒருவர் கைதானார்!

கொழும்பு, ஜன. 13

சுமார் இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஹெரோயினுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் ஹன்வெல்ல, தெனகமுவ பிரதேசத்தில் வைத்து சந்தேக நபரான பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து 520 கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் 202 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள், இலத்திரனியல் தராசு மற்றும் மூன்று வங்கி புத்தகங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ரூபவாஹினிக்கான மின்சாரம் துண்டிப்பு!

கொழும்பு, ஜன. 13

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் நவம்பர் மாதத்துக்கான மின்சார கட்டணத்தை செலுத்தாததையடுத்து மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனம் 55 இலட்சம் ரூபாயை நிலுவையாக வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
13.01.2023 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இதில் எவரின் இராஜதந்திரமும் இல்லை

அரசன் அன்றறுப்பான் - தெய்வம் நின்றறுக்கும் என்றொரு கூற்றுண்டு. அதேபோன்று, மேற்குலக சக்திகள் எப்போது - எவ்வாறு செயல்படும் என்பதை அவர்கள் மட்டுமே அறிவார்கள். அவர்களுக்குத் தெரியும் எப்போது இறுக்க வேண்டும் - எப்போது தளர்த்த வேண்டும் என்பது.

முன்னாள் ஜனாதிபதிகளான ராஜபக்ஷ சகோதரர்கள் இருவர்மீதும் ஒரே நேரத்தில் கனடிய அரசு தடை வித்திருக்கின்றது. ஒருவேளை, கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்க குடியுரிமையுடன் இருந்திருந்தால் இவ்வாறானதொரு தடையை கனடிய அரசு வித்திருக்காது. ஓர் அமெரிக்கர்மீது கனடிய அரசால் தடைவிதிக்க முடியாது. ஆனால், சரியானதொரு தருணம் பார்த்து இரண்டு சகோதரர்கள் மீதும் ஒரேநேரத்தில் கனடிய அரசு பாய்ந்திருக்கின்றது. கோட்டாபயவுக்கு அரணாக இருப்பார் என்னும் நம்பிக்கையில், வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட அலி சப்ரி விழிபிதுங்கிக் கிடக்கின்றார். அலி சப்ரி மட்டுமல்ல, ஜீ. எல்.எபீரிஸ் இருந்திருந்தாலும் - வேறு எந்த சிங்கள நிபுணர் இருந்திருந்தாலும்கூட நடக்க வேண்டியது நடந்தேதீரும். ஏனெனில், அது மேற்குலக மூலோபாய வடிவமைப்போடு தொடர்புபட்டது. அதனை ஒரு சிறிய நாட்டின் வெளிவிவகார அமைச்சரால் தடுத்துவிட முடியாது.

இந்த சம்பவத்துக்கும் புலம்பெயர் சமூகத்துக்கும் தொடர்பு இருப்பதாகவும் புலம்பெயர் சமூகத்தைத் திருப்திப்படுத்தவே இவ்வாறானதொரு தடையை கனடிய அரசு மேற்கொண்டிருப்பதாகவும் தென்னிலங்கையில் உள்ளவர்கள் புலம்பிக் கொண்டிருக்கின்றனர். இதனால், புலம்பெயர் சமூகத்தில் உள்ளோர் பூரித்துப் போயிருக்கின்றனர். அவர்களும் இதனை நம்புகின்றனர் - கனடிய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிக்கின்றனர். ஆனால், உண்மையோ, இவ்வாறான நம்பிக்கைகளுக்கும் - கற்பனைகளுக்கும் அதிக தொலைவில் இருக்கின்றது.

கனடிய அரசியல்வாதிகள் புலம்பெயர் தமிழ் மக்களின் வாக்குகளை இலக்குவைத்து பேசுவதும் - செயல்படுவதுமுண்டுதான். ஆனால், கனடிய அரசின் அணுகுமுறை என்பதற்கும் - வாக்குகளை இலக்கு வைக்கும் அரசியல் வாதிகளின் அணுகுமுறைக்கும் அதிக வேறுபாடுகளுண்டு. இதே புலம்பெயர் சமூகம் விடுதலைப் புலிகள்மீதான தடையை நீக்குமாறு கோரி பல வருடங்களாக குரலெழுப்பி வருகின்றது. அதனை கனடிய அரசு கருத்தில் கொள்ளவில்லை. ஏனெனில், எதனை எப்போது செய்ய வேண்டும், செய்யக் கூடாது என்பதற்கான அழுத்தங்களை வெளியிலிருந்து எவருமே வழங்க முடியாது. அது பிராந்திய, உலகளாவிய நலன்களிலிருந்தே தீர்மானிக்கப்படுகின்றன. கனடாவைப் பொறுத்தவரையில், அமெரிக்காவின் பசுபிக் மூலோபாய வளையத்திற்குள் இருக்கும் நாடது. அமெரிக்காவின் ஆலோசனையின்றி அங்கு எதுவும் நகராது. அமெரிக்க ஆலோசனையின்படிதான், கனடாவின் நகர்வுகள் நடைபெறும். ஒருவேளை விடுதலைப் புலிகள்மீதான தடையை கனடா நீக்கினால், இலங்கையின் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் குரலெழுப்பும் தகுதியை கனடா இழந்துவிடும். இவ்வாறுதான் விடயங்களை நோக்க வேண்டும்.

சர்வதேச சக்திகளின் மூலோபாய நகர்வுகளை கொழும்பால் தடுத்து நிறுத்திவிட முடியாது. அவ்வாறு எண்ணினால் அது மடமை. ஆனால், சர்வதேச ஒழுங்குக்கு உள்ளிருக்கும் ஒரு நாட்டின்மீது அழுத்தங்களை பிரயோகிக்கக்கூடிய எல்லைக்குள்தான் வெளித்தரப்புக்கள் செயலாற்றும். ஒருவேளை, கோட்டாபய ஜனாதிபதியாக இருந்திருந்தால் இவ்வாறானதொரு தடையை விதித்திருக்க முடியாது. ஏனெனில், அது இலங்கையுடனான உறவை முற்றிலும் பாதித்துவிடும். கோட்டாபய ராஜபக்ஷ சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு இழக்கும் வரையில் காத்திருந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இதன் மூலம் தென்னிலங்கைக்கு ஒரு தெளிவான செய்தி வழங்கப்பட்டிருக்கின்றது. அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை கொழும்பு நாடிக்கொண்டிருக்கும் நிலையில்தான் ஆளும் தரப்பாக இருக்கும் பொதுஜன பெரமுனவின் போசகர் மகிந்த ராஜபக்ஷவை மனித உரிமைகள் மீறல் குற்றவாளியென்று கனடா அறிவித்திருக்கின்றது. ஆனால், பஸில் மீது எந்தவொரு குற்றச்சாட்டும் இல்லை. மேலும் அவர் ஓர் அமெரிக்கரும்கூட.

# தமிழரசு கட்சி முல்லைத்தீவில் கட்டுப்பணம் செலுத்தியது!

*முல்லைத்தீவு, ஜன. 13*

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப் பணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி நேற்று வியாழக் கிழமை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் செலுத்தி யுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக மாவட் டத்தின் நான்கு பிரதேச சபைகளுக்குமான கட்டுப் பணத்தை செலுத்தி யுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் சிவமோகன் மற்றும் செயலாளர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கமலேஷ்வரன் ஆகியோர் இணைந்து எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் பங்கு கொள்வதற்கான கட்டுப் பணத்தை செலுத்தினர்.



# வடக்கு மாகாண இளைஞர்களுக்காக ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்!

*யாழ்ப்பாணம், ஜன. 13*

வடக்கு மாகாண இளைஞர்களுக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை ஏற்படுத்தும் மாகாண மட்ட கலந்துரையாடல் இளைஞர்கள் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் தலைமை அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றது.

இளைஞர்களுக்கான வலுவான பொருளாதாரம், ஆரோக்கியமான இளைஞர் தலைமுறை, தேசிய பொருளாதாரத்திற்கான வலுவான இளைஞர் தொழில்முனைவு, இளைஞர் திறன் மற்றும் திறன்களை மேம்படுத்துதல், மற்றும் இளைஞர்களுக்கான புதிய வேலைகள், இளைஞர் கள், இளைஞர்கள் சமூக பள்ளி, இளைஞர் பாராளு மன்ற அதிகாரம், இளைஞர் கள் விளையாட்டு பொருளா தாரத்தில் மேம்படுத்தல் ஆகிய துறைகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, அமைச்சின் செயலாளர் கணபதிப் பிள்ளை மகேசன், வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் , கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் யாழ் மாவட்ட பிரதம திட்டமிடல் பணிப் பாளர் நிக்கலஸ்பிள்ளை உட்பட வடமாகாண விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(ஐ)

# போதைப் பொருள் வாங்கிவிட்டு பணம் கொடுக்காதோர் கொலை!

*கொழும்பு, ஜன. 13*

போதைப் பொருள் வாங்கிவிட்டு பணத்தைக் கொடுக்கத் தவறியமைக்காக இரு இளைஞர்கள் கொன்று புதைக்கப்பட்டனர் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

ரம்புக்கனை பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மாவனெல்லை பிரதேசத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களும் போதைப் பொருள் பெற்று பணத்தை செலுத்தத் தவறியமைக்காக சில வாரங்களுக்கு முன்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இளைஞன் காணாமல் போனமை தொடர்பில் உயிரிழந்தவரின் குடும்பத்தினர் கேகாலை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

சந்தேக நபர்கள் இளைஞர்களை கொன்று அதே தோட்டத்தில் புதைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் இளைஞர்களை கொன்று தோட்டத்தில் புதைத்ததாக பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த ஏனைய சந்தேகநபர்கள் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜனவரி - 13 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 29
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : பிரதமை




**மேடம்**
நீண்டநாள் முயற்சி ஒன்று வெற்றியாகும். பிள்ளைகளால் நன்மை அடைவீர்கள். பணியிடத்தில் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். உறவினரால் உதவி உண்டாகும்.

**இடபம்**
அரசு வழியிலான எதிர்பார்ப்பு நிறைவேறும். பகைவர்களின் தொல்லை விலகும்.வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னைகளை சரி செய்வீர்கள். உங்கள் அணுகுமுறையால் ஆதாயம் அதிகரிக்கும்.

**மிதுனம்**
தடைகளை சரி செய்து வெற்றி அடைவீர்கள். உங்கள் செயல்களில் லாபம் உண்டாகும். தொழிலில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள். புதிய முயற்சி ஆதாயமாகும்.

**கடகம்**
உங்கள் வார்த்தைகளுக்கு மதிப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**சிம்மம்**
மனதில் குழப்பத்திற்கு இடமளிக்காதீர்கள். திட்டமிட்டு செயல்படும் செயல்கள் வெற்றியாகும். வேலைப் பளு அதிகரிக்கும். பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

**கன்னி**
பணத் தட்டுப்பாட்டின் காரணமாக முயற்சிகள் இழுபறியாகும். சிந்தித்து செயல்பட வேண்டிய நாள். தொழிலில் எதிர்பார்த்த லாபம் காண முடியாமல் போகும். எதிர்பார்த்த வரவு தள்ளிப் போகும்.

**துலாம்**
எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். இழுபறியாக இருந்த ஒரு முயற்சி நிறைவேறும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். உங்கள் செல்வாக்கு உயரும்.

**விருட்சிகம்**
உங்கள் நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தொழிலை விரிவு செய்வீர்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**தனுசு**
திட்டமிட்டு செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். வெளி வட்டாரத்தில் உங்கள் மதிப்பு உயரும். பூர்வீக சொத்துகளில் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். வழக்கு உங்களுக்கு சாதகமாகும்.

**மகரம்**
செயலில் நெருக்கடி உண்டாகும். உதவி புரிவதாக சொன்னவர்களை சந்திக்க முடியாமல் போகும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி இழுபறியாகும். எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகும்.

**கும்பம்**
மாலை வரை உங்கள் செயல்களில் லாபம் உண்டாகும். நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள் உழைப்பு அதிகரிக்கும். உங்கள் திறமையால் எண்ணியதை அடைவீர்கள்.

**மீனம்**
உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்னை விலகும். உங்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் மனம் மாறுவர். நெருக்கடிகள் நீங்கும். எதிர்பார்த்த நன்மைகளை அடைந்து மகிழ்வீர்கள்.

# சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்ற தமிழ்நாடு அரசு ஒத்துழைப்பு வழங்கும்

## முதல்வர் ஸ்டாலின் உறுதி

சென்னை, ஜன. 13

சேது சமுத்திர திட்டத்தை உடனடியாக நிறைவேற்றக் கோரி முதல்வர் மு. க. ஸ்டாலின் சட்டப் பேரவையில் கொண்டு வந்த பிரேரணை ஏகமனதாக தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சேது சமுத்திர திட்டத்தை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி சட்டப்பேரவையில் அரசின் தனித் பிரேரணையை முதல்வர் மு. க. ஸ்டாலின் நேற்றுக் கொண்டு வந்தார்.

இதில் முதல்வர் பேசுகையில், ”அண்ணாவின் கனவு திட்டம் சேது சமுத்திரத் திட்டம், இந்த திட்டத்திற்கான தீர்மானத்தை முன்மொழிகிறேன். 1967ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்புக்கு வந்த பேரறிஞர் அண்ணா, கருணாநிதிக்கு எழுதிய மடலில் இத்திட்டத்தை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள்.

சேது சமுத்திர கால்வாய் திட்டத்தை நிறைவேற்றினால் வர்த்தகம் பெருகும், இலங்கையை சுற்றிக்கொண்டு கப்பல் போக வேண்டிய நீளம் குறையும், மீனவர்கள் வாழ்வு செழிக்கும். 2004ஆம் ஆண்டு தி. மு. க. ஆட்சியில் இருந்த போது அப்போதய பிரதமர் மன்மோகன்சிங் இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

1998ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய், இந்தத் திட்டத்துக்கான பணிகளுக்கு நிதி ஒதுக்கினார், பா. ஜ. க. ஆட்சியில்தான் சேது சமுத்திர திட்டத்துக்கான பாதை எது என தீர்மானிக்கப் பட்டது.

2004ஆம் ஆண்டு ஒன்றிய அளவில் காங்கிரஸ் ஆட்சி மாறி தி. மு. க. கூட்டணி ஆட்சி வந்த பிறகு ரூ.247 கோடி நிதி ஒதுக்கப்பட்டு திட்டப் பணிகள் 50 வீத முடிந்த நிலையில், அரசியல் காரணங்களுக்காக பா. ஜ. க. இத்திட்டத்துக்கு முட்டுக் கட்டை போட்டது.

சேது சமுத்திர திட்டத்தை இனியும் நிறைவேற்றால் இருப்பது தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கு, வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போடும் நிகழ்வாகவே கருதி இந்த மன்றம் கவலை தெரிவிக்கிறது. இனியும் இந்த திட்டத்தை செயல்படுத்தவிடால் சில சக்திகள் முயல்வது நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானது என்று இந்த மாமன்றம் கருதுகிறது. எனவே, மேலும் தாமதம் இன்றி ஒன்றிய அரசு இந்த திட்டத்தை செயல்படுத்த முன் வர வேண்டும். திட்டத்தை செயல்படுத்த தமிழக அனைத்து ஒத்துழைப்பும் வழங்கும்.” இவ்வாறு முதல்வர் பேசினார். (ஐ)

# குடியரசு தலைவரிடம் தி. மு. க. ஆளுநருக்கு எதிராக முறையீடு

புதுடில்லி, ஜன. 12

பாராளுமன்ற உறுப்பினர் டி. ஆர். பாலு தலைமையில் தி. மு. க. பிரதிநிதிகள் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை நேற்று நேரில் சந்தித்தனர்.

தமிழக சட்டப்பேரவையில் கடந்த திங்கட்கிழமை ஆளுநர் உரையின்போது நடந்த நிகழ்வு தொடர்பாக குடியரசுத் தலைவரிடம் தி. மு. க. பிரதிநிதிகள் குழு விளக்கம் அளித்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் கடந்த திங்கள்கிழமை தொடங்கியது. ஆண்டின் முதல் கூட்டம் என்பதால் ஆளுநர் உரையுடன் கூட்டம் தொடங்கியது. ஆளுநர் உரையைத் தொடங்கியதும் திமுகவின் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கடந்த காலங்களில் ஆளுநரின் செயல்பாடுகளுக்கு எதிராக முழக்கம் எழுப்பிவிட்டு வெளிநடப்பு செய்தனர்.

தொடர்ந்து ஆளுநர் ஆர். என். ரவி உரையாற்றியபோது, அச்சிடப்பட்ட உரையில் இடம் பெற்றிருந்த திராவிட மொடல் அரசு உள்ளிட்ட கருத்துகளை வாசிக்காமல் தவிர்த்தார்.

இதையடுத்து, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பேரவையில் உள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டுள்ள ஆங்கில உரை மற்றும் பேரவைத் தலைவரால் வாசிக்கப்பட்ட தமிழ் உரை மட்டுமே அவைக்குறிப்பில் இடம்பெற வேண்டும் என்ற தீர்மானத்தை முதல்வர் ஸ்டாலின் முன்மொழிந்தார்.

உடனே, கூட்டம் நிறைவடையும் முன்னரே அவையிலிருந்து ஆளுநர் வெளியேறினார். முதல்வர் கொண்டுவந்த தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. தமிழக பேரவை வரலாற்றில் முதன்முறையாக இந்த நிகழ்வு நடைபெற்றுள்ளது. (ஐ)

# “பா. ஜ. கவின் திட்டத்துக்கு துணைபோகிறது தி. மு. க.”

சென்னை, ஜன. 12

“நெய்வேலி நிலக்கரி நிறுவனம் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டால், மக்கள் நிலங்களைத் தர முன்வரமாட்டார்கள் என்பதால் அதற்கு முன்பே நிலங்களைக் கையகப்படுத்த வேண்டுமென்ற இந்திய ஒன்றிய பா. ஜ. க. அரசின் சதித் திட்டத்திற்கு திமுக அரசும் துணைபோகிறது” என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: ”நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் சுரங்க விரிவாக்கப் பணிகளுக்காக நெய்வேலியைச் சுற்றியுள்ள 60 கிராமங்களிலிருந்து ஏழை, எளிய மக்களின் 25 ஆயிரம் ஏக்கர் நிலங்களை வலுக்கட்டாயமாக அபகரிக்க முயலும் தமிழ்நாடு அரசின் செயல் வன்மையான கண்டனத்துக்கு உரியது. நெய்வேலி நிறுவனத்தைத் தனியாருக்கு விற்க இந்திய ஒன்றிய அரசு முடிவு செய்துவிட்ட நிலையில், அந்நிறுவனத்திற்கு நிலங்களை அபகரித்து அளிக்க தமிழ்நாடு அரசு அவசரம் காட்டுவது எதேச்சதிகாரப்போக்கின் உச்சமாகும்.

திட்டமிட்டு தமிழர்களைப் புறக்கணிக்கும் நெய்வேலி நிறுவனத்திடம் பேசி தமிழர்களின் உரிமையைப் பெற்றுக் கொடுக்க எவ்வித முயற்சியும் எடுக்காத தமிழ்நாடு அரசு, நிலங்களை மட்டும் பறித்துக்கொடுக்க முனைப்பு காட்டுவது தமிழ் மக்களுக்கு செய்கின்ற பச்சைத்துரோகமாகும். தமிழர்களுக்கு உறுதியளித்தபடி வேலையும், உரிய இழப்பீடும் வழங்காதபோது, எதற்காக தமிழர் நிலங்களைப் பறித்து நிலக்கரி நிறுவனத்திடம் வழங்க அம்மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்கள் துடிக்கிறார்கள்? அவர்களுக்கு ஏதாவது பெருத்த லாபம் இதன் மூலம் கிடைக்கவிருக்கிறதோ?

ஏற்கெனவே நிலக்கரி எடுப்பதற்காக தமிழர்களிடம் பறிக்கப்பட்ட நிலங்களில் 10000 ஏக்கர் இன்னும் பயன்படுத்தாது இருப்பில் உள்ள நிலையில், மேலும் 25000 ஏக்கர் நிலங்களை வலுக்கட்டாயமாக எதற்குப் பறிக்க வேண்டும்? நெய்வேலி நிலக்கரி நிறுவனம் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டால், மக்கள் நிலங்களைத் தர முன்வரமாட்டார்கள் என்பதால் அதற்கு முன்பே நிலங்களைக் கையகப்படுத்த வேண்டுமென்ற இந்திய ஒன்றிய பாஜக அரசின் சதித் திட்டத்திற்கு திமுக அரசும் துணைபோகிறது.

இதுதான் பாஜகவின் தமிழர் விரோதப் போக்கை எதிர்க்கும் திமுகவின் திராவிட மொடல் அரசா? பொதுத்துறை நிறுவனமாக இருந்தபோதே உரிய இழப்பீடும், நிரந்தரப் பணியும் முறையாக வழங்காது நிலம் வழங்கிய தமிழர்களை நீதிமன்றத்திற்கு அலையவிட்ட நிலையில், தனியார் மயமாகப்போகும் நிறுவனத்தை நம்பி எப்படி தமிழர்கள் தங்கள் நிலங்களை ஒப்படைக்க முடியும்? இது முழுக்க முழுக்க தமிழர்களை தங்களது சொந்த மண்ணில், நிலமற்ற கூலிகளாக, அகதிகளாக மாற்ற பாஜக, திமுக இணைந்து நடத்தும் கூட்டுச்சதியேயாகும். இது போன்ற சூழ்ச்சிகளுக்கு இனியும் தமிழர்கள் ஏமாறமாட்டார்கள் - என்றார்.

(ஐ)

# மருந்து தட்டுப்பாடு காரணமாக புற்றுநோயாளிகளுக்கு சிக்கல்!

## வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 13

மஹரகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் புற்றுநோயாளிகளுக்கு தேவையான சுமார் 15 பிரதான அத்தியாவசிய புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் புற்று நோயாளர்களுக்கான 15 பிரதான அத்தியாவசிய புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு காணப்படுகின்றது.

அதிநவீன மருத்துவ சிகிச்சை முறைகளால் குணப்படுத்தக்கூடிய பல வகையான புற்றுநோய்கள் உள்ளன. இருப்பினும் மருந்து தட்டுப்பாடு காரணமாக பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக திட்டமிடப்பட்ட அட்டவணையின்படி சிகிச்சைகளை வழங்க முடியாத நிலையேற்பட்டுள்ளது. மேலும் ஆயிரக்கணக்கான நோயாளிகளின் உயிர்கள் பெரும் ஆபத்தில் உள்ளன.

இவ்விடயம் தொடர்பில் உடனடி கவனம் செலுத்தி புற்று நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளை அந்தந்த வைத்தியசாலைகளில் வழங்குவதற்கு தலையிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (அ)

# யாழில் போதை மாத்திரைகளுடன் பெண் உட்பட இரண்டு பேர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 13

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் போதை மாத்திரைகளுடன் ஆணொருவரும் பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டனர்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார் இருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை சோதனையிட்டபோது, அவர்களிடமிருந்து 400 போதைமாத்திரைகள் (40 கார்ட்) மீட்கப்பட்டன.

அதனை அடுத்து மேலதிக விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்ட இருவரையும் அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (அ)

# சிறு தேயிலை விவசாயிகளுக்கு மானியமாக யூரியா வழங்கல்

கொழும்பு, ஜன. 13

சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு யூரியா உரத்தை மானிய அடிப்படையில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை தேயிலை கைத்தொழில் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி உர நிறுவனத்துடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் சந்தையில் சுமார் 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உரத்தை சுமார் 17000 ரூபாவுக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்ததாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட உரங்கள், தேயிலை விவசாயிகளின் வீடுகளுக்கு நேரடியாக கொண்டு செல்லப்பட்டு வழங்கப்படும் என்றும், மூன்று மாதங்களுக்குள் அதற்கான தொகையை அவர்கள் செலுத்த முடியும் என்றும் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர். (அ)

# யாழில் மாடுகள் திருடி வந்த குற்றத்தில் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணம், இருபாலைப் பகுதிகளில் மாடுகளை திருடி விற்பனை செய்து வந்த சந்தேகத்தில் நபர் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞனொருவரே கைது செய்யப்பட்டார்.

இருபாலைப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் கட்டி வைக்கப்பட்டிருந்த மாடுகள் திருடப்பட்டு இருந்தன. அது தொடர்பில் உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இந்நிலையில் திருடப்பட்ட மாடுகளை வேறு ஒரு நபருக்கு விற்க முயன்றபோது மாடுகளின் உரிமையாளரால் மாடுகள் அடையாளம் காணப்பட்டு, அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

அதனை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் மாடுகளைத் திருடிய குற்றத்தில் இளைஞனை கைது செய்ததுடன், மாடுகளையும் மீட்டனர்.

கோப்பாய், இருபாலை, கல்வியங்காடுப் பகுதிகளில் இடம்பெற்ற மாட்டு திருட்டுச் சம்பவங்களுடன் சந்தேக நபருக்கு தொடர்புகள் இருப்பதாகவும், அது தொடர்பில் தாம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பண வீக்கத்தால் பாதிக்கப்பட்ட நான்காவது நாடாக இலங்கை!

கொழும்பு, ஜன. 13

உலகில் பணவீக்கம் அதிகமுள்ள நாடுகளில் ஏழாவது இடத்தில் இருந்த இலங்கை 3 இடங்கள் முன்னேறி, நான்காவது பணவீக்க நாடாக மாறியுள்ளது.

ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டு பொருளாதாரப் பேராசிரியரான ஸ்டீவ் ஹான்கேவின் வெளியிட்ட தரவின்படி டிசம்பர் மாதத்தில் பணவீக்கம் 66 சதவீதமாக உள்ளது.

ஆனால் இலங்கையின் உண்மையான பணவீக்கம் 101 சதவீதமாக இருப்பதாக பேராசிரியரான ஸ்டீவ் ஹான்கேவின் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமீபத்திய பட்டியலின்படி சிம்பாப்வே முதலிடத்திலும் இரண்டாவது இடத்தில் வெனிசுவேலாவும் மூன்றாவது இடத்தில் கியூபாவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# களனிதிஸ்ஸ சுழற்சி மின்னுற்பத்தி நிலையத்தின் செயல்பாடு நிறுத்தம்

கொழும்பு, ஜன. 13

களனிதிஸ்ஸ சுழற்சி மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மின் பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு முதல் மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மின்னுற்பத்தி நிலையத்தை செயற்படுத்துவதற்கான நெப்தா எரிபொருள் இல்லாமையே இதற்கு காரணம் என்றும் குறித்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக 165 மெகாவோட் மின்சாரம் இழக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, களனிதிஸ்ஸ அனல் மின் நிலையத்தை ஒரு நாளுக்கு இயக்குவதற்கு சுமார் 9 லீற்றர் நெப்தா எரிபொருள் தேவைப்படுவதாகவும் மின் பொறியியலாளர்கள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# எலிக் காய்ச்சல் பரவல் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 13

நாட்டில் எலிக்காய்ச்சல் அதிகளவில் பரவி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதுவருடம் ஆரம்பமாகி 10 நாட்களுக்குள் 58 பேர் நோய் அறிகுறிகளுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் 6 ஆயிரத்து 800 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாடசாலையில் வைத்து அதிபரை மோசமாக தாக்கிய உயர்தர மாணவர்!

## வவுனியாவில் புதனன்று சம்பவம்

வவுனியா, ஜன. 13

வவுனியாவில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் மீது உயர்தர மாணவன் தாக்குதல் மேற்கொண்ட நிலையில் அதிபர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மாணவன் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மதியம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வுக்கு மாணவர்கள் எவ்வாறு சமூகமளிக்கவேண்டும் என்பது தொடர்பிலும், மாணவர்களது ஒழுக்கம் தொடர்பிலும் பாடசாலை மாணவர்களுக்கு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டபோதே அதிபர் மற்றும் ஆசிரியர்களால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

பாடசாலையால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீறி பாடசாலை மாணவர்களின் ஒழுக்க நடைமுறைக்கு மாறாகவும், காதில் தோடு அணிந்தவாறும் மாணவன் ஒருவர் குறித்த நிகழ்வுக்கு சமூகமளித்தார்.

குறித்த மாணவனை அவதானித்த அதிபர், மாணவன் அணிந்திருந்த தோட்டைக் கழற்றிவிட்டு மாணவர்களின் ஒழுக்கத்துடன் வருமாறு கூறி அனுப்பியுள்ளார்.

இதனையடுத்து அங்கிருந்து சென்ற மாணவன் மது அருந்திவிட்டு பாடசாலைக்கு வருகை தந்து நிகழ்வு மண்டபத்தில் அதிபர், விருந்தினர்கள் மற்றும் ஆசிரியர்கள் அமர்ந்திருந்தபோது அதிபர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார். இதன்போது அங்கு விருந்தினராக கலந்துகொண்ட பிரதிநிதி ஒருவருக்கும் சிறு காயம் ஏற்பட்டது.

காயமடைந்த அதிபர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவத்தையடுத்து அங்கு சென்ற பாடசாலை பழைய மாணவர்கள் குறித்த மாணவனைப் பிடித்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸார் இது தொர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மாணவன் வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவனாவார்.

இதேவேளை, பிறிதொரு நகரப் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற உயர்தர மாணவர் ஒன்றுகூடலின்போது மாணவர்கள் மோட்டர் சைக்கிள் மற்றும் கார்களுடன் பாடசாலை வளாகத்துக்குள் அதிக ஒலி எழுப்பி அசௌகரியத்தை ஏற்படுத்தியமையால் நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் சிலர் வெளியேறிச் சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# தனுஷ்க குணதிலகவுக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 13

தனுஷ்க குணதிலகவுக்கு எதிரான வழக்கின் விசாரணையை அவுஸ்திரேலிய நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

இதற்கமைய அவருக்கு எதிரான வழக்கின் விசாரணையை பெப்ரவரி 23 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளதாக அவுஸ்திரேலிய நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பொலிஸார் தங்களின் சாட்சியங்களை இறுதி செய்யக்கூடிய வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

31 வயதான தனுஷ்க குணதிலக, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 20/20 உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியா சென்றிருந்தார்.

இதன்போது டேட்டிங் செயலியில் சந்தித்த பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்ததாக நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

சிட்னி டவுனிங் சென்டர் உள்ளூர் நீதிமன்றில், நீதவான் டேவிட் பிரைஸ், நேற்று வியாழக்கிழமை இந்த வழக்கை பெப்ரவரி 23ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

அத்துடன், தனுஷ்க பெப்ரவரியில் நீதிமன்றில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவருக்கான கடுமையான நிபந்தனைகள் மற்றும் இரவு நடமாட்ட கட்டுப்பாடு உத்தரவு என்பன தொடர்கின்றன.

அவர் தனக்கு எதிரான குற்றச்சாட்டை முன்வைத்துள்ள பெண்ணைத் தொடர்பு கொள்ள அனுமதியில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர் சமூக ஊடகங்கள் அல்லது டேட்டிங் செயலிகளை பயன்படுத்தவும் தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சீனாவும் இந்தியாவும் கடன்களை மறுசீரமைக்க உடன்படவேண்டும்

## இலங்கை மத்திய வங்கி கோரிக்கை

கொழும்பு, ஜன. 13

சீனாவும் இந்தியாவும் தங்களின் கடன்களை மறுசீரமைக்க உடன்படவேண்டும் என்று இலங்கை மத்திய வங்கி வலியுறுத்தியுள்ளது.

பி.பி.சி இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் பில்லியன் கணக்கான டொலர் கடனை குறைக்க சீனாவும் இந்தியாவும் முதலில் ஒப்புக் கொள்ளும் வரை சர்வதேச நாணய நிதியம் பணத்தை வழங்காது.

எனவே அனைத்துத் தரப்பினரும் விரைவாகச் செயல்படுவது சிறந்தது என்று மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இது, அந்த நாடுகளின் கடன்களை இலங்கை திருப்பிச் செலுத்த உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடமைகளை நிறைவேற்றாமல், நீண்ட காலத்திற்கு இவ்வாறான நிலையில் இருக்க இலங்கையும் விரும்பவில்லை. அது நாட்டுக்கும் மக்களுக்கு நல்லதல்ல.

அத்துடன் இலங்கைக்கு வரும் முதலீட்டாளர்களின் நம்பிக்கைக்கு நல்லதல்ல என்று மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் மிகப்பெரிய இருதரப்பு கடன் வழங்குபவராக இருக்கும் சீனாவுக்கு இந்த விடயத்தில் அதிக பொறுப்பு உள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு தாமதிக்க நேரம் இல்லை என்பதால், சீனாவும் தாமதிக்காது என்று தாம் நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

இதனால் சீனாவுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவும் சீனாவும் இறுதியில் இலங்கைக்கான தங்கள் கடன்களை மறுசீரமைக்க ஒப்புக்கொண்டால், நாட்டின் வெளிநாட்டுக் கடன் பங்குகளில் 40 சதவீதப் பங்கு வகிக்கும் தனியார் கடனாளிகளிடம் இருந்து சிக்கல் உருவாகும் என்று பிபிசி குறிப்பிட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டில் ஆர்ஜென்ரீனா பொருளாதார நெருக்கடியில் மூழ்கிய பின்னர், சில அமெரிக்க ஹெட்ஜ் நிதிகள், திறந்த சந்தையில் தாங்கள் பெற்ற இறையாண்மை பத்திரங்களை மறுசீரமைப்பதை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, திருப்பிச் செலுத்துமாறு கோரி அந்த நாட்டு அரசாங்கத்தை அமெரிக்க நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றன என்பதை பிபிசி சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில் இந்தியா, சீனா உட்பட்ட இருதரப்பு கடன்கொடுனர் இணங்கினால், இன்னும் 6 வாரக்காலப்பகுதியில் இலங்கை, சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டை எட்டமுடியும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளதாக பிபிசி குறிப்பிட்டுள்ளது. (அ)

# முட்டையின் விலை வாரந்தோறும் மாறும்

கொழும்பு, ஜன. 13

முட்டை உற்பத்தி செலவை வாரந்தோறும் கணக்கிட்டு வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

சந்தையில் முட்டையின் விலை தொடர்பில் பல்வேறு தரப்பினர் முன்வைத்த கவலைகளை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களம் டிசெம்பர் வரை ஒரு முட்டையின் உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு மாதந்தோறும் வெளியிட்டது.

இந்த வாரம் முதல் வெள்ளிக்கிழமைகளில் முட்டையின் உற்பத்தி விலை வெளியிடப்படும் என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

தற்போதைய கணக்கீடுகளின்படி, ஒரு முட்டையை இறுதி நுகர்வோருக்கு 50 ரூபாவுக்கு வழங்க முடியும் என திணைக்களம் தெரிவித்துள்ளது. சமீப வாரங்களில் முட்டை விலை 70 ரூபா வரை உயர்ந்திருந்தது.

எனினும், முட்டை இறக்குமதி செய்ய உள்ளதாக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து, உள்ளூர் சந்தையில் முட்டை விலை குறைந்துள்ளது.

உற்பத்தியாளர்கள் முட்டைகளை லொரிகளில் முக்கிய ஊர்களுக்கு கொண்டு சென்று தலா 53 ரூபாவுக்கு விற்பனை செய்து வருகின்றனர். (அ)

# ரூபா 10 மில்லியன் மோசடி; யாழில் அரச அதிகாரி கைது

யாழ்ப்பாணம், ஜன. 13

ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் யாழ் விற்பனை நிலையத்தின் பொறுப்பதிகாரியை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்துள்ளது.

10 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மோசடியில் ஈடுபட்டதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரியொருவர், சந்தேக நபர் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும்போது அரசாங்கத்திற்கு பெறவேண்டிய பணப் பத்திரங்களை மாற்றியமைத்து மோசடி செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

ஆயுர்வேத மருந்து கூட்டுத்தாபனத்துக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டையடுத்து, கடந்த சில நாட்களாக இடம்பெற்று வந்த இந்த மோசடி தொடர்பான நீண்ட விசாரணையின் பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கைது செய்துள்ளனர்.

ரூ.10,329,480 மோசடி செய்யப்பட்டுள்ளதாக சி.ஐ.டி தெரிவித்துள்ளது. (அ)

# சீன எக்ஸிம் வங்கியின் தலைவருடன் ஜனாதிபதி ரணில் கலந்துரையாடல்

கொழும்பு, ஜன. 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி (எக்ஸிம்) வங்கியின் தலைவர் வூ புலினுடன் கடந்த செவ்வாய்க்கிழமை கலந்துரையாடலொன்றை மேற்கொண்டார்.

மெய்நிகர் காணொளி தொழில்நுட்பம் ஊடாக இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது இரு தரப்பு ஒத்துழைப்பு மற்றும் இலங்கையின் தற்போதைய கடன் பிரச்சினைகள் குறித்து இரு தரப்பும் கருத்துகளை பரிமாறிக் கொண்டதாக கொழும்பில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பரிமாற்றங்கள் மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தவும், நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கு உதவவும் இரு தரப்பும் ஒப்புக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு புதிய தலைவர்

கொழும்பு, ஜன. 13

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2023- 2024 ஆம் ஆண்டுக்கான தலைவராக சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் பதவிகளுக்காக நேற்று முன் தினம் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன தலைவர் பதவிக்காக வேட்புமனு தாக்கல் செய்ததோடு, செயலாளர் பதவிக்காக சட்டத்தரணி இசுறு பாலபட்டபெந்தி வேட்புமனு தாக்கல் செய்தார்.

குறித்த பதவிகளுக்காக வேறு எவரும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யவில்லை.

அதற்கமைய, சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன சங்கத்தின் தலைவராகவும் சட்டத்தரணி இசுரு பாலபட்டபெந்தி செயலாளராகவும் தெரிவாகியுள்ளனர். (அ)

# யாழில் களமிறங்குகிறது ஐக்கிய சோசலிசக் கட்சி!

கொழும்பு, ஜன. 13

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் களமிறங்குவதற்கு ஐக்கிய சோசலிசக் கட்சி திட்டமிட்டுள்ளது என்று அதன் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

“யாழ். மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள சில சபைகளுக்கு எமது கட்சி போட்டியிடும். மக்களும் அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.” - எனவும் சிறிதுங்க ஜயசூரிய குறிப்பிட்டார்.

ஆட்டோ சின்னத்திலேயே ஐக்கிய சோசலிசக் கட்சி களமிறங்கவுள்ளது. (அ)

# காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவு சிறுகதைப் போட்டி



மறைந்த எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவாக ஆண்டுதோறும் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் மிகச்சிறந்த சிறுகதை ஒன்றைத் தெரிவுசெய்து பரிசளிக்க காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை தீர்மானித்திருக்கின்றது. 2022ம் ஆண்டு வெளிவந்த சிறுகதைகள் இந்த தெரிவில் இடம்பெறவிருக்கின்றன. அவ்வாறு முதல்தடவையாக 2022ல் வெளிந்த உங்கள் சிறுகதைகளின் பிரதியை அனுப்பிவையுங்கள்.

அததோனோடு இணைந்ததாக புதிதாக எழுதப்பட்ட (இதுவரை வெளிவராதி) சிறுகதைகளில் மூன்று சிறுகதைகளை தெரிவுசெய்து பரிசு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளை அனுப்பிவைக்கலாம்.

**சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை**
**707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஊடக அனுசாரணை: ஈழநாடு



# ஜனாதிபதி மாற்றப்பட்டபோதும் எவ்வித முன்னேற்றமும் இல்லை

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 13

**இலங்கையில் ஜனாதிபதி பதவியில் மாற்றம் செய்ததன் காரணமாக எவ்வித முன்னேற்றமும் கிடையாது என மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.**

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்காமை, ஊழல் மோசடிகள், முறையற்ற முகாமைத்துவம், சட்டம் ஒழுங்கை மலினப்படுத்தியமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை எதிர்த்து மக்கள் கடந்த ஆண்டில் வீதியில் இறங்கிப் போராட்டம் செய்தனர்.

பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு வரும் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவியிலிருந்து விலகினார்.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவி ஏற்றுக் கொண்டார்.

ரணில் விக்கிரமசிங்கவும் போராட்டக்காரர்களை ஒடுக்கியதுடன், சட்ட ரீதியான போராட்டங்களை தடுத்தார் எனவும், கடந்த கால குற்றச் செயல்களுக்கு நியாயம் வழங்கவில்லை எனவும், மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென் ஆசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

பொறுப்புகூறல் மற்றும் மறுசீரமைப்புக்களை செய்வதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு ரணில், அடக்குமுறைகளின் ஊடாக பதிலளித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு உதவும் வெளிநாட்டு தரப்புக்கள் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (அ)

# இரண்டு பஸ்களின் வேகத்தால் இருவரின் நிலை கவலைக்கிடம்

கொழும்பு, ஜன. 13

அளுத்கம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட களுவா மோதர பாலத்தில் நேற்றுக் காலை வாகன விபத்தொன்று இடம்பெற்றது.

மாத்தறையில் இருந்து கொழும்பு நோக்கி வந்த இ.போ.ச.வுக்கு சொந்தமான பஸ்ஸுக்கு பின்னால் வந்த, பெலியத்தை - கொழும்பு பயணிகள் பஸ், இ.போ.ச. பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்டபோது முன்னால் வந்த ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஓட்டோவில் பயணித்த இருவர் படுகாயமடைந்து களுத்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தையடுத்து பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து காரணமாக காலி - கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து நடவடிக்கைகள் சுமார் ஒரு மணிநேரம் தடைப்பட்டிருந்தன. (அ)

# 785 பயணிகளுடன் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு



கொழும்பு, ஜன. 13

785 வெளிநாட்டு பயணிகளை ஏற்றிய பயணிகள் கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தை வந்த டைந்துள்ளது.

நேற்றுக் காலை இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து வந்த இந்த கப்பல் இரண்டு நாட்கள் இலங்கையில் நங்கூர மிட்டிருக்கும். எம்.எஸ். அமேரா என்று அழைக்கப்படும் பயணிகள் கப்பலே இவ்வாறு இலங்கை வந்துள்ளது. (அ)

# வாக்குரிமையைப் பயன்படுத்தும் விடயத்தில் அரசு தலையிட முயற்சி!

## சட்டத்தரணிகள் சங்கம் கவலை

கொழும்பு, ஜன. 13

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் மக்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தும் விடயத்தில் அரசாங்கம் தலையிடும் முயற்சிகள் குறித்து தாம் மிகவும் கவலையடைவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மாவட்டச் செயலாளர்கள் தேர்தல் வைப்புத் தொகையை ஏற்கவேண்டாம் என்று பொது நிர்வாகம், உள்துறை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், கடந்த 2023 ஜனவரி 9ஆம் திகதியன்று அறிவுறுத்தலை விடுத்திருந்தார்.

இது தேர்தலில் அரசாங்கத் தின் தலையீட்டை குறிப்பதாக சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஏற்கனவே இலங்கையின் உயர்நீதிமன்றம், 156 வழக்குகளில் மக்கள் வாக்குரிமையை பயன்படுத்துவது என்பது பாதுகாக்கப்பட வேண்டிய அடிப்படை உரிமை என்பதை சுட்டிக்காட்டியுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அடிப்படை உரிமைகள் மற்றும் அதிகார உரிமைகள் ஆகியவை இலங்கை மக்களின் இறையாண்மையின் இரண்டு முக்கிய அம்சங்களாகும், அவை பிரிக்க முடியாதவை என்றும் சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# சுதந்திர தின நிகழ்வுகளுக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

கொழும்பு, ஜன. 13

இலங்கையின் 75ஆம் சுதந்திர தின நிகழ்வுகளுக்காக 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி காலி முகத்திடலில் இந்த நிகழ்வு நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வுக்காக 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை பொது நிர்வாக அமைச்சு உறுதி செய்துள்ளது.

இந்த நிகழ்வை நடத்துவதற்கு இந்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் செலவுகளைக் குறைக்க முயற்சிக்கப்படும் எனவும், பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் பண்டார போபகே தெரிவித்தார்.

இதேவேளை, 75ஆம் சுதந்திர தின நிகழ்வுகளுக்காக பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் 75ஆவது சுதந்திர தின வைபவத்தில் ஆரம்பத்தில் சிங்கள மொழியிலும், நிறைவில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இன்புளுவன்சா, டெங்கு வேகமாகப் பரவுகிறது!

கொழும்பு, ஜன. 13

தற்போதைய நாட்களில் இன்புளுவன்சா மற்றும் டெங்கு நோய் வேகமாகப் பரவி வருவதாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் ஆலோசகர் மருத்துவர் நந்தன திக்மதுகொட தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


இந்த நோய் தாக்கம் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் முதியவர்களுக்கு அதிக ஆபத்து. எனவே அறிகுறியுள்ளவர்கள் தாமதமின்றி மருத்துவ ஆலோசனையைப் பெறவேண்டும்.

தற்போது பரவி வரும் இன்புளுவன்ஸா மாறுபாடு சுவாச மண்டலத்தை பாதிக்கின்றது. இது ஆபத்தானது. வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இருமல், தொண்டை வலி மற்றும் சில சமயங்களில் தலைச்சுற்றல் போன்ற அறிகுறிகள் ஏற்படும். சிலருக்கு சில நாட்களில் குணமடைந்தாலும், சிலருக்கு நீடித்த இருமல் மற்றும் மூச்சுத் திணறல் கூட ஏற்படலாம்.

கர்ப்பிணி தாய், 70 அல்லது 80 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் நாட்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வைரஸால் பாதிக்கப்பட்டால், அது உயிருக்கு ஆபத்தானதாக அமையும்.

அத்தகையவர்கள் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டும். நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உட்கொள்வதை அவர்கள் தவிர்க்க வேண்டும்.

அதிக காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேல் சோர்வுடன் இருந்தால், டெங்கு காய்ச்சலும் இந்த நாட்களில் வேகமாக பரவி வருவதால், பரசிட்டமோல் தவிர வேறு மருந்துகளை உட்கொள்வதை மக்கள் தவிர்க்க வேண்டும் - என்றார். (அ)



# ஜப்பானிய வர்த்தகர்கள் குழு ஜனாதிபதி ரணிலுடன் பேச்சு

கொழும்பு, ஜன. 13

ஜப்பானிய அமைச்சரவை அலுவலக இராஜாங்க அமைச்சர் சடோஷி புஜிமரு உள்ளிட்ட ஜப்பானிய வர்த்தகர்கள் குழு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சு நடத்தியது.

இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டதோடு விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா, சுரங்கக் கைத்தொழில், தொழிலாளர் பயிற்சி உட்பட இலங்கையிலுள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்களின் கீழ், புதிய மற்றும் வளர்ந்து வரும் கைத்தொழில்களுக்கு ஏற்றவாறு நாட்டை மாற்றியமைக்கும் வகையில் இலங்கையின் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்தப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் சர்வதேச அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதி பணிப்பாளர் தினுக் கொழம்பகே ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (அ)

# காஷ்மீர் பண்டிட்களின் நிலை தாய்மண், ஆனால் அகதிகள்!

காஷ்மீர் பள்ளத்தாக்கிலிருந்து பயங்கரவாதிகளால் துரத்தப்பட்டு ஜம்மு பகுதியில் வாழும் லட்சக் கணக்கான காஷ்மீர் பண்டிட் சமூகத் தினரின் வேதனைகள் தொடர்கின்றன. அவர்களை மறுகுடியமர்த்தும் இந்திய மத்திய அரசின் திட்டங்கள் பயங்கர வாதிகளின் திடீர்த் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.



தற்போது ஜம்மு-காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்கள், முன்பு ஜம்மு-காஷ்மீர் என்கிற தனி மாநிலமாக இருந்தது. 1989-95 காலகட்டத்தில் காஷ்மீர் பயங்கரவாதிகளின் மதரீதியான தொடர் தாக்குதல்களால் 700-க்கும் மேற்பட்ட காஷ்மீர் பண்டிட் சமூகத் தைச் சார்ந்த இந்துக்கள் பலியாகினர். மண்ணின் மைந்தர்களான அவர்கள் தங்கள் உயிரையும் குடும்பத்தையும் பாதுகாக்க, வீடுகளையும் சொத்து களையும் கைவிட்டு, காஷ்மீர் பள்ளத் தாக்கிலிருந்து வெளியேறி ஜம்முவில் அடைக்கலம் புகுந்தனர். அன்று முதல் இன்று வரை அவர்கள் சொந்த நாட்டி லேயே அகதிகள் போல வாழ்கின்றனர்.

இவ்வாறு ஜம்முவில் குடிபெயர்ந்த அகதி பண்டிட்களின் எண்ணிக்கை சுமார் 3 லட்சத்தி 50 ஆயிரம். இவர்களது வீடுகளும் சொத்துகளும் பயங்கரவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டன. இந்த இனப்படுகொலை தொடர்பான வழக்குகளில் பெரும்பாலானவை இதுவரை முழுமை பெறவில்லை. குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படவில்லை.

இந்த விவகாரத்தை பாஜக ஆரம்பத்திலிருந்தே நாடு முழுவதிலும் பிரசாரம் செய்து வருகிறது. ஜம்மு-காஷ்மீரில் சிறுபான்மையினராக உள்ள இந்துக்களின் பாதுகாப்பு குறித்து, தேசிய அளவில் சிறுபான்மையினர் நலன் குறித்துப் பேசும் எந்தக் கட்சியும் பேசுவதில்லை என்பது பாஜகவின் பிரதான குற்றச்சாட்டு.

எனவேதான், மத்தியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாஜக ஆட்சி அமைந்தவுடன், காஷ்மீர் பள்ளத்தாக்கிலிருந்து வெளியேறிய காஷ்மீர் பண்டிட் சமூகத்தினரை மீண்டும் அங்கு குடியமர்த்தும் பணிகளைத் தொடங்கியது. ஆனால் வாழ்வாதாரம் தொலைந்து 33 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில், பண்டிட்கள் அங்கு செல்லத் தயங்குகின்றனர்.

எனவே, காஷ்மீர் பண்டிட் சமூகத்தினரின் மறுகுடியமர்வுக்காக பிரதமரின் மேம்பாட்டுத் திட்டம் 2015-இல் தொடங்கப்பட்டது. அதன்படி, ஜம்மு - காஷ்மீரில் உள்ள அரசுப் பணியிடங்களில் 3,000 இடங்கள் காஷ்மீர் அகதி பண்டிட்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. கடந்த ஐந்தாண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 2,639 பேர் பணியமர்த்தப்பட் டுள்ளனர்.

இதனிடையே காஷ்மீர் மாநிலத்துக்கு அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவின்கீழ் வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்தும் 2019-இல் நீக்கப்பட்டது. மத்திய அரசின் திட்டங்கள் வெற்றி பெற்றால் தங்கள் பிரிவினை எண்ணம் பலிக்காது என்பதை உணர்ந்த பயங்கரவாதிகள், 2020 முதல் அங்கு அரசுப் பணியில் அமரும் காஷ்மீர் பண்டிட்களைத் தாக்கி வருகின்றனர்.

கடந்த ஆண்டில் காஷ்மீர் பண்டிட்கள் மூவர் உள்ளிட்ட சிறுபான்மை மதத்தினர் 14 பேர் ஜம்மு-காஷ்மீரில் கொல்லப்பட்டிருப்பதாக, மாநிலங்களவையில் மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த ராய் தெரிவித்திருக்கிறார்.

லஷ்கர்-ஏ-தொய்பா பிரி வினைவாத இயக்கம், இந்தத் தாக்குதல்களுக்குப் பின்னணியில் இருந்து செயல்படுவதாக உளவுத்துறை தகவல்கள் கூறுகின்றன.

கடந்த மே மாதம் பட்காம் அருகில் வட்டாட்சியர் அலுவலக ஊழியர் ராகுல் பட்டும், குல்காம் அருகில் பள்ளி ஆசிரியை ரஜினி பாலாவும் பணியிடத்திலேயே பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதையடுத்து, ஜம்மு-காஷ்மீரில் தங்கள் உயிருக்கு பாதுகாப்பு இல்லாததால் அங்கு வழங்கப்பட்ட அரசுப் பணியைத் தொடர மறுத்து, ஜம்முவிலேயே தங்களுக்கு பணியிட மாற்றம் கோரி வருகின்றனர் காஷ்மீர் பண்டிட்கள்.



எனவே, இவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய மாதாந்திர ஊதியம் கடந்த ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. தவிர, தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்கிற அரசின் உறுதியை பண்டிட் மக்கள் நம்பத் தயாராக இல்லை. அரசை ஆதரிக்கும் உள்ளூர் இஸ்லாமிய மக்களையே கொல்லத் துணிந்த பயங்கரவாதிகள் தங்களை விட்டு வைப்பார்களா என்பதுதான் பண்டிட் மக்களின் ஐயம்.

இதனிடையே டிசம்பர் 5-ஆம் திகதி, காஷ்மீரில் பணியாற்றும் பண்டிட் சமூக அரசு ஊழியர்கள் 56 பேரின் பட்டியலை வெளியிட்டு அவர்களைக் கொல்லப்போவதாக, எதிர்ப்பு முன்னணி (டி.ஆர்.எஃப்.) என்ற பயங்கரவாத அமைப்பு எச்சரிக்கை விடுத்தது. ஆனால், காஷ்மீர் பண்டிட் சமூகத்தைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் தங்களுக்கு பணி வழங்கப்பட்ட இடத்தில் பணி புரியாதவரை அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படமாட்டாது என்று ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேச துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா எச்சரித்திருக்கிறார்.

இதுநாள் வரை பாஜகவின் ஆதரவாளர்களாக இருந்த காஷ்மீர் பண்டிட்கள், இந்தத் தொடர் நிகழ்வுகளால் தற்போது அக்கட்சியின் தீவிர எதிர்ப்பாளர்களாக மாறி வருகின்றனர். காஷ்மீர் விவகாரத்தில் தங்கள் உயிரைப் பணயம் வைத்து மத்திய அரசு விளையாடுவதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இவ்வாறாக சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழும் காஷ்மீர் பண்டிட்களின் நிலை பரிதாபத்துக்குரியதாக மாறி இருக்கிறது. ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டுவரப்படாதவரை, அங்கு அமைதியை நிலைநாட்டுவது பகல் கனவாகவே இருக்கும். அங்குள்ள பயங்கரவாதிகளுக்குத் துணைபுரியும் அண்டைநாடான பாகிஸ்தான் திருந்தாதவரை காஷ்மீர் பண்ட் மக்களின் வாழ்க்கை நிலையறடறதாகவே தொடரும்.

(தினமணி)

தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்கிற அரசின் உறுதியை பண்டிட் மக்கள் நம்பத் தயாராக இல்லை. அரசை ஆதரிக்கும் உள்ளூர் இஸ்லாமிய மக்களையே கொல்லத் துணிந்த பயங்கரவாதிகள் தங்களை விட்டு வைப்பார்களா என்பதுதான் பண்டிட் மக்களின் ஐயம்.



# உணவுக்காக சண்டையிடும் மக்கள்:



## பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் பாகிஸ்தான்!

**ரஜ்னீஷ் குமார்**

பாகிஸ்தான் தொடர்பான பல வீடியோ காட்சிகள் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றன. பெரும்பாலான வீடியோக்களில் மக்கள் கோதுமை மாவு மற்றும் ரொட்டிக்காக ஒருவருக்கொருவர் சண்டையிடுகிறார்கள்.

பாகிஸ்தானின் பொருளாதார அவல நிலை மற்றும் விலைவாசி உயர்வின் அளவைக் காட்ட இந்த வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

வீடியோவில் சில நிபுணர்களின் கருத்துகளும் வைரலாகி வருகின்றன. இதேபோன்ற கருத்தை அமெரிக்காவின் டெலாவேர் பல்கலைக்கழக பேராசிரியர் முக்தர் கானும் கூறியுள்ளார். பேராசிரியர் முக்தர் கான் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு அமெரிக்க குடிமகன்.

“இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான அதிகார சமநிலையின்மை பாகிஸ்தானுக்கு சாதகமாக இருந்திருந்தால், நீங்கள் காஷ்மீருக்காக இந்தியாவை தாக்கியிருப்பீர்கள்” என்று முக்தர் கான் ஒரு பாகிஸ்தான் பத்திரிக்கையாளரிடம் கூறினார்.

“அமெரிக்கா பாகிஸ்தானுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்துவிட்டது. இப்போது அமெரிக்காவின் ஆர்வம் பாகிஸ்தான் மீது இல்லை. அமெரிக்கா பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட வேண்டும். இனி பாகிஸ்தானை அது நம்ப முடியாது. இந்த ஆண்டு பாகிஸ்தான் இரண்டு போர்களை சந்திக்க வேண்டும். ஒன்று தெஹ்ரீக் -இ -தாலிபன் உடன் போராட வேண்டும். தெஹ்ரீக் அ தலிபான் இன் புதிய வரைபடத்தை பார்த்தால், அதில் பாகிஸ்தான் உள்ளது. தற்போது பாகிஸ்தான் சிக்கலில் உள்ளது. ஆனால் இந்தியா அதை மேலும் சிக்கலில் ஆழ்த்த முயற்சிக்கவில்லை,” என்று பாகிஸ்தான் பத்திரிகையாளர் ஃபக்ர் யூசுப்சாயிடம் முக்தர் கான் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் தனது பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் கடன் மற்றும் சில உதவிகளைப் பெற்ற மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறது. வெள்ளப் பெருக்கு சிக்கலில் இருந்து மீள்வதற்கு 9 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான உதவி, திங்களன்று சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடந்த நன்கொடையாளர்கள் மாநாட்டில் பாகிஸ்தானுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் கருவூலம் வேகமாக காலியாகி வரும் நிலையில், இந்த செய்தி பாகிஸ்தானுக்கு பெரும் நிம்மதியை அளித்துள்ளது. பாகிஸ்தானிடம் சுமார் நாலரை பில்லியன் டாலர்கள் அந்நிய செலாவணி கையிருப்பே மீதமுள்ளது. அது சில வாரங்களின் இறக்குமதி செலவுக்கு மட்டுமே போதுமானது. இது தவிர பாகிஸ்தானுக்கு பல கடன்களை திருப்பிச்செலுத்தும் பொறுப்புகளும் உள்ளன. ஜெனீவா மாநாட்டில் 9 பில்லியன் டாலர் திரட்டியதை ஹாபாஸ் ஷெரீப் அரசு தனது சாதனையாக காட்டி வருகிறது.

### சவூதியின் உதவியால் நிலைமை சீராகாது

முன்னதாக செவ்வாயன்று பாகிஸ்தானின் பழைய கடன் மற்றும் முதலீட்டை அதிகரிப்பது குறித்து பரிசீலித்து வருவதாக சவூதி அரேபியா தெரிவித்தது. சவூதி அரேபியா பாகிஸ்தானுக்கு வழங்கிய பழைய மூன்று பில்லியன் டொலர் கடனை ஐந்து பில்லியன் டொலராக உயர்த்துவதோடு கூடவே முதலீட்டை அதிகரிப்பது பற்றியும் பேசியுள்ளது.

இது தவிர அடுத்த மூன்று ஆண்டுகளில் உலகின் பிற அமைப்புகளிடமிருந்து 8.7 பில்லியன் டொலர்களை பாகிஸ்தானுக்கு தருவதாகவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை கடனாகப் பெறப்படுமா அல்லது மானியமாக கொடுக்கப்படுமா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.



> **பாகிஸ்தானின் மத்திய வங்கியில் அந்நியச் செலாவணி கையிருப்பு 4.5 பில்லியன் டொலராகக் குறைந்துள்ளது. இந்த தொகை நான்கு வாரங்களுக்கும் குறைவான இறக்குமதி செலவை சமாளிக்க மட்டுமே போதுமானது**

ஜெனீவாவில் பாகிஸ்தானின் காலநிலை குறித்த ஒரு சர்வதேச மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டை ஐக்கிய நாடுகள் சபை ஏற்பாடு செய்திருந்தது. பாகிஸ்தானில் கடந்த ஆண்டு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு லட்சக்கணக்கான மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குமாறு இந்த மாநாட்டில் ஐ.நா. வேண்டுகோள் விடுத்தது. ஐ.நா மற்றும் பாகிஸ்தானின் முறையீட்டின் பேரில் பல அரசுகள், அமைப்புகள் மற்றும் மக்கள், 9 பில்லியன் டொலர்களுக்கு மேல் உதவிக்கான உத்தரவாதத்தை அளித்துள்ளனர்.

### மத்திய வங்கியில் 4.5 பில்லியன் டொலர் அந்நியச் செலாவணி கையிருப்பு

“ஜெனீவா மாநாட்டில் பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ 9 பில்லியன் டொலர்களை திரட்டுவதில் வெற்றி கிடைத்துள்ளது. இதற்காக சர்வதேச சமூகத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்,”என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் அன்டோனியோ குட்ரெஸ் ட்வீட் செய்துள்ளார்.

பாகிஸ்தானின் முன்னணி ஆங்கில நாளேடான ‘டான்’ சமீபத்திய நிகழ்வுகள் குறித்து ஜனவரி 11 ஆம் திகதி ஒரு தலையங்கம் எழுதியுள்ளது.

டான் தனது தலையங்கக் குறிப்பில், “இங்குள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிடைத்துவிட்டது போல அரசு அதிகாரிகள் பெருமிதம் கொள்கிறார்கள். இதனால் பாகிஸ்தானின் டொலர் தட்டுப்பாடு முடிவுக்கு வரப்போவதில்லை என்பதே உண்மை,” என்று எழுதியுள்ளது.

பாகிஸ்தானின் மத்திய வங்கியான எஸ்பிபியில் அந்நியச் செலாவணி கையிருப்பு 4.5 பில்லியன் டொலராகக் குறைந்துள்ளது. இந்த தொகை நான்கு வாரங்களுக்கும் குறைவான இறக்குமதி செலவை சமாளிக்க மட்டுமே போதுமானது. பாகிஸ்தானுக்கு அவசரமாக டொலர் தேவைப்படுகிறது. சர்வதேச செலாவணி நிதியத்துடனான பேச்சுவார்த்தையை பாகிஸ்தான் இறுதி செய்யாத வரை, ஜெனீவா மாநாடு மற்றும் பிற அமைப்புகளிடமிருந்து உதவி கிடைப்பது கடினம்.

### பொருளாதார நெருக்கடி

“ஐஎம்எஃப் ஒப்பந்தத்திற்காக பொருளாதார சீர்திருத்தங்கள் வலியுறுத்தப்படக்கூடாது என்று பிரதமர் விரும்புகிறார். இந்த சீர்திருத்தங்கள் - ஒற்றை சந்தை அடிப்படையிலான மாற்று விகிதம், மின் கட்டணம் மற்றும் எரிவாயு விலை அதிகரிப்பு மற்றும் வரி அதிகரிப்பு. சர்வதேச நாணய நிதிய நிதி மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சில உறுதியான உதவிகளை வழங்க பாகிஸ்தான் விரும்புகிறது. பாகிஸ்தான் எதிர்கொண்டுள்ள நெருக்கடி இந்தக் கடன்கள், உதவிகள் மூலம் உறுதிமொழிகள் மூலம் தீர்க்கப்படும் என்று தோன்றவில்லை,” என்று டான் எழுதியுள்ளது.

“ஜெனீவா மாநாட்டில் எட்டு பில்லியன் டாலர்களை திரட்ட ஷாபாஸ் ஷெரீப் இலக்கு நிர்ணயித்திருந்தார். ஆனால் அதை விட அதிகமாக தருவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது பிரச்னைக்கு தீர்வல்ல. பாகிஸ்தான் நீண்ட கால பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்,” என்றும் டான் நாளேட்டின் தலையங்கம் கூறுகிறது.

ஜெனீவா மாநாடு, சவூதி அரேபியா மற்றும் பிற அமைப்புகள் உறுதி கூறியுள்ள உதவி குறித்து பாகிஸ்தானிய சமூக ஊடகங்கள் விவாதித்து வருகின்றன.

பாகிஸ்தானின் பொருளாதார கட்டுரையாளர் ஃபாரூக் சலீம், கபரியா சேனல் பப்ளிக் நியூஸின் விவாத நிகழ்ச்சியில், “பாகிஸ்தானிடம் நாலரை பில்லியன் டாலர்கள் உள்ளது. அது 20 நாட்களுக்கு மேல் நீடிக்காது. இது மிகவும் ஆபத்தான நிலை. பாகிஸ்தானை யாரேனும் காப்பாற்ற முடியும் என்றால் அது சர்வதேச நாணய நிதியம் தான் என்று நான் நினைக்கிறேன். சவூதி அரேபியாவிலிருந்து பணம் வருவதில் தாமதம் ஏற்படலாம்,” என்று கூறியுள்ளார்.

### அதிகரிக்கும் விலைவாசி

ஒரு அமெரிக்க டாலருக்கு நிகரான பாகிஸ்தான் ரூபாயின் மதிப்பு 240 ரூபாய். எரிபொருளில் இருந்து உணவு பொருட்கள் வரை எல்லா பொருட்களின் விலையும் வானத்தை தொடும் அளவிற்கு உயர்ந்து வருகிறது.

பாகிஸ்தானில் வெங்காயத்தின் விலை கிலோவுக்கு 240 ரூபாயாக உள்ளது. எரிசக்தி பயன்பாட்டைக் குறைக்க, சந்தைகள், மால்கள் மற்றும் திருமண மண்டபங்களை முன்கூட்டியே மூட பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது.

சந்தைகள் மற்றும் வணிக வளாகங்களை இரவு 8.30 மணிக்குள் மூட வேண்டும் என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் குவாஜா முகமது ஆசிப் கடந்த வாரம் கூறியிருந்தார். அதேநேரம் இரவு 10 மணிக்குள் திருமண மண்டபங்கள் மூடப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆறாயிரம் கோடி ரூபாயை சேமிக்க முடியும் என்கிறார் குவாஜா ஆசிப்.

பாகிஸ்தானில் இருந்து ஆப்கானிஸ்தானுக்கு டொலர்கள் கடத்தப்படுவதாகவும், இதனால் பாகிஸ்தான் ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்து வருவதாகவும் வெளிநாட்டு நாணய டீலர் ஒருவர் கூறுகிறார்.

“ஒவ்வொரு மாதமும் இரண்டு பில்லியன் டொலர்கள், அதிகாரப்பூர்வ மற்றும் அதிகாரப்பூர்வமற்ற வர்த்தகம் மூலம் ஆப்கானிஸ்தானுக்கு செல்கிறது. ஆப்கான் கடப்பு வர்த்தகம் தவறாக பயன்படுத்தப்படுகிறது. எல்லா எல்லைகளில் இருந்தும் கடத்தல் நடக்கிறது. இதனால் பாகிஸ்தானின் அந்நியச் செலாவணி கையிருப்பு நேரடியாக பாதிக்கப்படுகிறது,” என்று கடந்த மாதம் பாகிஸ்தானின் எக்ஸ்சேஞ்ச் கம்பெனிகள் சங்கத்தின் தலைவர் மாலிக் போஸ்தான் கூறினார்.

1965 ஆம் ஆண்டில், ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஆப்கான் கடப்பு வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் கீழ் பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்தை ஆப்கானிஸ்தான் பயன்படுத்திக் கொள்கிறது. (பி.பி.சி.)

ஈழநாடு



# ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் மைத்திரிபால சிறிசேன 10 கோடி ரூபாய் நஷ்டஈடு வழங்க உத்தரவு!





இலங்கையில் 2019, ஏப்ரல் 21ஆம் திகதியன்று நடத்தப்பட்ட ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் தொடர்பான 12 மனுக்கள் மீதான தீர்ப்பை உயர்நீதிமன்றம் நேன்று (12.01.2023) வழங்கியுள்ளது.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு தாக்குதலைத் தவிர்ப்பதற்குத் தவறியதன் ஊடாக, தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, பாதிக்கப்பட்ட தரப்பினரால் 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்கள் மீதான தீர்ப்பை நேற்று உயர்நீதிமன்றம் வழங்கியது.

இதன்படி, 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்த போதிலும், அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் ஊடாக அப் போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ, முன் னாள் போலீஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந் தர, அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பிரதானி நிலந்த ஜயவர்தன, முன்னாள் தேசிய புலனாய்வு பிரதானி சிசிர மென்டீஸ் ஆகியோர் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதற்கேற்ப, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபா (10 கோடி) செலுத்த வேண்டும் என உயர்நீதிமன்ற நீதியரசர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

அத்துடன், முன்னாள் போலீஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வு பிரதானி நிலந்த ஜயவர்தன ஆகியோர் 75 மில்லியன் ரூபா விதமும், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ 50 மில்லியன் ரூபாவும் செலுத்த வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, முன்னாள் புலனாய்வு பிரதானி சிசிர மென்டீஸ் 10 மில்லியன் ரூபாவை பாதிக்கப்பட்ட தரப்பினருக்குச் செலுத்த வேண்டும் என நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நஷ்ட ஈடு தொகையானது, தமது சொந்த பணத்திலிருந்து செலுத்தப்பட வேண்டும் எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அதேபோன்று, தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அரசாங்கத்தால் தலா ஒரு மில்லியன் ரூபா வீதம் நஷ்ட ஈடு செலுத்த வேண்டும் என உயர்நீதிமன்ற தீர்ப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு அரசாங்கத்தால் 5 லட்சம் ரூபா வீதம் நஷ்ட ஈடு செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் அரச புலனாய்வு பிரதானி நிலந்த ஜயவர்தனவிற்கு எதிராக 6 மாத காலத்திற்குள் உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என உயர்நீதிமன்ற தீர்ப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹாரே, எல்.ரி.பீ. தெஹிதெனிய, முர்த்து பெர்ணான்டோ, எஸ்.துரைராஜா, ஏ.எச்.எம்.டீ.நவாஸ், சிரான் குணரத்ன ஆகிய நீதிபதிகள் குழாமினால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் தேதி, ஈஸ்டர் தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தில் 8 தற்கொலை குண்டுதாரிகள் அடங்களாக 277 பேர் உயிரிழந்திருந்தனர்.

அத்துடன், இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சுமார் 400க்கும் அதிகமானோர் காயமடைந்திருந்ததாக தாக்குதல் தொடர்பில் விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதலில் 40 வெளிநாட்டு பிரஜைகளும் 45 குழந்தைகளும் உயிரிழந்திருந்தனர்.

இலங்கையிலுள்ள முக்கிய மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள், மூன்று ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை இலக்காகக் கொண்டு இந்த தற்கொலை குண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தாக்குதலை தேசிய தவ்ஹீத் ஜமாஅம் அமைப்பு நடத்தியமை, விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்டது.

தேசிய தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பின் தலைவராக செயற்பட்ட சஹ்ரான் ஹாசிம் இந்தத் தாக்குதலுக்கு தலைமை தாங்கியிருந்ததுடன், அவரும் இந்தத் தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்திருந்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து, நாட்டின் பல்வேறு பகுதிகளில் வன்முறைகள் இடம்பெற்றன.

முஸ்லிம்களை இலக்காகக் கொண்டு, பல்வேறு பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டதுடன், பல கோடி ரூபாய் சொத்துகளுக்கும் இதனூடாக சேதம் விளைவிக்கப்பட்டது.

கல்வி tv CHANNEL-1

**13.01.2023**

**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**13.01.2023**

**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தமிழ் அரசியல் தலைமைகளின் ஒற்றுமையே தமிழருக்குப் பலம்!

## சுட்டிக்காட்டுகிறார் இரா. துரைரெட்ணம்



அம்பாறை, ஜன.13

**“இனவாதிகளிடமிருந்து தமிழ் மக்களையும், மண்ணையும் பாதுகாப்பதற்கு ஒரே ஒரு பலம் தமிழ் அரசியல் தலைமைகளின் ஒற்றுமையேயாகும். ஒற்றுமையை சிதறடித்தால் சமூகமே தொடர்ந்தும் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டிய அவலம் ஏற்படும்.”**

- இவ்வாறு, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் (ஈ.பி.ஆர்.எல்.எப் பத்மநாபா அணி) இரா.துரைரெட்ணம் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இனவாதிகளிடமிருந்து தமிழ் மக்களை பாதுகாப்பதற்கு ஒரே ஒரு பலம் தமிழர்களின் ஒற்றுமையே. உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக தமிழரசுக் கட்சி மத்தியகுழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமானது அக் கட்சியின் ஜனநாயகமே. ஆனால் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் இனவாதிகளின் செயற்பாடுகள் காரணமாகவும், இனவாத அரசின் செயற்பாடுகளாலும் கடந்த காலத்தில் நேரடியாக பாதிக்கப்பட்ட எமது சமூகம் அரசிலுள்ள தமிழ் ஆட்சியாளர்களாலும் நேரடியாக பாதிக்கப்பட்டது எமது சமூமாகும்.

இந்த நிலையில் எதிர்காலத்தில் தமிழர்களைப் பலப்படுத்துவதற்கு எம்மத்தியில் இருக்கும் ஒற்றுமை சிதைந்துவிடக்கூடாது என மக்கள் விரும்புவதால் ஒற்றமையே எமது பலம்.

இதை கருத்திற் கொண்டு தமிழரசுக்கட்சி மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற தவறியதுபோல் ஏனைய கட்சிகளான ரெலோ, புளொட் உட்பட தமிழ்த் தேசியக் கட்சிகள் தனித்தனியாக செயற்படுவதென்பது ஆரோக்கியமில்லை - என்றார். (அ-6)



# 30 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி

அம்பாறை, ஜன. 13

திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் கமசமஹ பிலிசந்தர நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக தெரிவுசெய்யப்பட 30 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலாளர் த. கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கணக்காளர் எம்.அரசரெத்தினம் , உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா ஆகியோருடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தெரிவு செய்யப்பட்ட பயனாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



# அழகுக்கலை பயிற்சி பெற்ற யுவதிகளுக்கு சான்றிதழ்கள்

அம்பாறை, ஜன. 13

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் அழகு கலைப்பயிற்சி நெறியினை நிறைவு செய்த யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் க. சதிசேகரன் உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா ஆகியோருடன் சமூக செயற்பாட்டாளர் வி.வாமதேவன் தென்கிழக்கு பழ்கலைக்கழக விரிவுரையாளரும் சமூக செயற்பாட்டாளருமான செல்வி. அனுசியா சேனாதிராசா மற்றும் பிரதேச செயலக இளைஞர் சேவை உத்தியோகத்தர் வை.பிரபாகரன் மற்றும் அழகுக் கலை ஆசிரியர் திருமதி சுபாஜினி பிரபாகரன் மற்றும் பயிற்சி பெற்றவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# மு.கா. அம்பாறை செயல்குழுவின் செயலராக ஏ.சி.சமால்தீன் தெரிவு

அம்பாறை, ஜன. 13

2023 உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடவடிக்கைக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளராக கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஏ.சி. சமால்தீன் தெரிவாகியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற்குழு மருதமுனை பொது நூலக கேட்போர் கூடத்தில் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற போது குறித்த நியமனம் தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

மேலும் முஸ்லிம் காங்கிரஸின் மாவட்ட செயற்குழுக்கூட்டத்தில் கட்சியின் தற்போதைய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும், எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறு தேர்தலில் களம் காண்பது பற்றியும் தெளிவாக கலந்தாலோசிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த கூட்டத்தில் பகிரங்கமாக எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து தனது மரச் சின்னத்தில் போட்டியிடும் என்பதுடன் வட்டாரக் கிளை அமைக்காத எவருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் அந்தஸ்தை வழங் காது என கட்சியின் தலைவர் பகிரங்கமாக அறிவிப்புச் செய்தார்.

இந்நிகழ்வில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம் ஹரீஸ், பைசால் காசிம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம் மன்சூர், அலி சாஹீர் மௌலானா, கட்சியின் தவிசாளர் ஏ.எல்.அப்துல் மஜீட், செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.நிசாம் காரியப்பர் கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)

# திருகோணமலை ஆசிரியர்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்!

திருமலை, ஜன. 13

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் திருகோணமலை மாவட்ட ஆசிரியர்களால் நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள கல்வி கூட்டுறவுச் சங்கத்தின் காரியாலயத்துக்கு முன்பாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிறுவனத்தின் மூலமாக கடன் உதவிகளை பெற்றுக்கொள்ள பரவலான ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் விண்ணப்பித்தபோதிலும் பல மாத காலமாக அதனை வழங்காமல் இழுத்தடிப்பு செய்யப்படுகிறது. ஆசிரியர்களது நலனுக்காக உருவாக்கப்பட்ட குறித்த சங்கத்தில்

ஆசிரியர்களது நலன்களுக்கான எந்த ஒரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாமல் அரசியல் லாபத்திற்காக மாத்திரமே குறித்த நிறுவனம் தற்போது இயங்கி வருவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

மேலும் நிர்வாக குழுவுக்கான காலஎல்லை



முடிவடைந்தபோதிலும் இன்னமும் புதிய நிர்வாக உறுப்பினர்கள் எவரும் தெரிவு செய்யப்படாமையானது தமக்கு மிகுந்த வருத்தத்தை தெரிவிப்பதாகவும் வெகுவிரைவில் புதிய நிர்வாகக் குழு கூடி அதன் மூலம் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் நிதி தொடர்பான குறைபாடுகளை தீர்த்து வைப்பதற்கு சம்பத்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர். (அ)

# கடற்கரையில் சிரமதான பணி



அம்பாறை, ஜன. 13

சுற்று சூழலை சுத்தமாக வைத்திருக்குமுகமாக ஜிசேர்ப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஹெல்விடாஸ் அனுசரணையில் சமாதானமும் சமூக பணி நிறுவனத்தினால் அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வை - சேஞ்ச் திட்டத்தின், கீழ் உள்ள கல்முனை பிரதேச இளைஞர் நல்லிணக்க குழுக்களின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து கல்முனை மாநகரசபையின் ஒத்துழைப்புடன் கல்முனை கடற்கரைப் பகுதியில் சிரமதானப் பணி நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் இளைஞர்கள்,யுவதிகள்,ஒன்றிணைந்து சிரமதானப் பணியை மேற்க்கொண்டனர். (அ)

ஈழநாடு



# சோலேடர் நகரையும் கைப்பற்றியது ரஷ்யா

## 500 உக்ரைனிய படையினர் பலி!

மொஸ்கோ, ஜன. 13

கிழக்கு உக்ரைனிய சுரங்க நகரமான சோலேடரை முழுமையாக விடுவித்துள்ளதாக ரஷ்யாவின் தனியார் இராணுவ நிறுவனமான வாக்னர் குழு அறிவித்தது. இதில், சுமார் 500 உக்ரைன் சார்பு துருப்புக்கள் கொல்லப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த அறிவிப்பு வருவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு, உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, நகரத்தின் ஒரு பகுதியைக் கட்டுப்படுத்துவதற்கான சண்டை தொடர்ந்ததாகக் கூறினார்.

வோக்னர் குழு தலைவர் செவ்வாயன்று தனது படைகள் சோலேடர் மீது கட்டுப்பாட்டை வைத்திருப்பதாக அறிவித்தார், ஆனால் நகர மையத்தில் இன்னும் போர்கள் நடைபெற்று வருவதாகக் கூறினார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில்-

உக்ரைனிய இராணுவத்தின் பிரிவுகளிலிருந்து சோலேடார் பிரதேசத்தின் முழுமையான விடுதலை



மற்றும் சுத்திகரிப்பு ஆகியவற்றை நான் உறுதிப்படுத்த விரும்புகிறேன். சரணடைய விரும்பாத உக்ரைனிய பிரிவுகள் அழிக்கப்பட்டன என்று அவர் ஒரு அறிக்கையில் கூறினார்.

வாக்னர் படைகள் "சுமார் 500 பேரைக் கொன்றன. முழு நகரமும் உக்ரேனிய வீரர்களின் சடலங்களால் சிதறிக்கிடக்கிறது-என்றார். (அ)

# ஆப்கான் வெளியுறவு அமைச்சு வளாகத்தில் குண்டுத் தாக்குதல்!

## ஐவர் பேர் உயிரிழப்பு



காபூல், ஜன. 13

ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சகத்திற்கு வெளியே நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் குறைந்தது ஐந்து பேர் கொல்லப்பட்டனர். ஆனால் சில அதிகாரிகள் இறப்பு எண்ணிக்கை அதிகம் என தெரிவித்துள்ளனர்.

காபூல் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் காலித் சத்ரான், இறந்தவர்களின் எண்ணிக்கை 5 என்று அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தினார்.

எனினும் 20 பேர் கொல்லப்பட்டதாக தலிபான் தகவல் அமைச்சின் அதிகாரி உஸ்தாத் பரீதுன் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சுக்குள் நுழைய குண்டுதாரி திட்டமிட்டிருந்ததாகவும் ஆனால் தோல்வியடைந்ததாகவும் அவர் கூறினார்.

உத்தியோகபூர்வ ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்பட்ட பகுதியில், இறந்தவர்கள் அல்லது காயமடைந்தவர்கள் 9பேர் அமைச்சுக்கு வெளியே வீதியில் கிடப்பதை காண முடிந்தது. மாலை 4 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. எந்த குழுவும் சம்பவத்துக்கு உடனடியாக பொறுப்பேற்கவில்லை.

பல அமைச்சுக்களைக் கொண்ட, தெருவில் சோதனைச் சாவடிகளால் சூழப்பட்ட பலத்த பாதுகாப்புப் பகுதியில் இந்த குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

துருக்கி, சீனா உள்ளிட்ட சில நாடுகள் இப்பகுதியில் தூதரகங்களைக் கொண்டுள்ளன. (அ)

# கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு நேட்டோ இராணுவ வாகனங்கள்

நியூயோர்க், ஜன. 13

நேட்டோவின் கிழக்குப் பகுதியை வலுப்படுத்தும் முயற்சிகளின் ஒரு பகுதியாக போலந்து மற்றும் லிதுவேனியாவுக்குச் கொண்டு செல்லப்படும் ஏராளமான அமெரிக்க இராணுவ டாங்கிகள் மற்றும் இராணுவ வாகனங்கள் நெதர்லாந்து துறைமுகமான விளிசிங்கனுக்கு புதன்கிழமை செல்லத் தொடங்கின.

இந்த துறைமுகத்திற்குள் சுமார் 1,250 இராணுவ உபகரணங்கள் வருகின்றன என்று அமெரிக்க தரப்பில் நடவடிக்கையை மேற்பார்வையிடும் கேணல் ராபர்ட் கெல்லம் கூறினார்.

இந்த உபகரணங்களில் எம்-1 ஆப்ராம்ஸ் டாங்கிகள் மற்றும் டெக்சாஸின் போர்ட் ஹூட்டின் முதலாவது குதிரைப்படை பிரிவின் 2வது பிரிகேட் காம்பாட் டீமின் பிராட்லி சண்டை வாகனங்கள் ஆகியவை அடங்கும்.

நெதர்லாந்து ஆயுதப் படைகள் கடல் பாதுகாப்பிற்கு உதவுவதோடு, போலந்து மற்றும் லிதுவேனியாவிற்கு கொண்டு செல்லப்படும் வரை வாகனங்கள் இருக்கும் துறைமுகப் பகுதியைக் காத்து வருகின்றன.

பெப்ரவரி 2022 இல் ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்ததைத் தொடர்ந்து, நேட்டோ வடக்கில் பால்டிக் கடல் முதல் தெற்கே கருங்கடல் வரையிலான நாடுகளில் தனது போர்க் குழுக்களை பலப்படுத்தி வருகிறது.



# அமெரிக்கா முழுவதும் விமானசேவை முடக்கம்

## தொழில்நுட்பக் கோளாறு காரணமாக

நியூயோர்க், ஜன. 13

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அமெரிக்கா முழுவதும் விமான சேவை நேற்று முன் தினம் முடங்கியது.

உலகம் முழுவதும் உள்ள விமான நிலையங்களில் கட்டுப்பாட்டு அறைகள் செயல்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட விமான நிலையத்தின் எல்லையில், விமானத்தை இயக்கும் விமானி அதன் கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பில் இருப்பார்.

அந்தந்தப் பகுதிகளில் நடைபெறும் விமானக் கண்காட்சிகள், பாராசூட் சாகசம், பட்டம் திருவிழா, லேசர் நிகழ்ச்சி, ரொக்கெட் சோதனை, போர் பயிற்சி, உயரமான கட்டிடங்களில் விளக்குகள் எரியாமல் இருப்பது, எரிமலை வெடிப்பு, பறவைகள் நடமாட்டம் உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகள் குறித்தும் கட்டுப்பாட்டு நிலையங்கள் மூலம் விமானிகளுக்குத் தெரிவிக்கப்படும். இந்த பாதுகாப்பு நடைமுறை என்.ஓ.டி.ஏ.எம் என்று அழைக்கப்படுகிறது. விமானிகளுக்கு புரியும் வகையில் சில குறியீடுகள் மூலம் என்.ஓ.டி.ஏ.எம் அறிவிப்பு வழங்கப்படும்.

அமெரிக்க விமானப் போக்கு வரத்துத்துறையின் என்.ஓ.டி.ஏ.எம் தொழில்நுட்பத்தில் கோளாறு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, அமெரிக்க விமானப் போக்குவரத்து ஆணையம் வெளியிட்ட எச்சரிக்கை அறிவிப்பில், அமெரிக்கா முழுவதும் உள்நாட்டு, பன்னாட்டு விமானங்கள் உடனடியாக தரையிறங்குமாறு உத்தரவிடப்பட்டது.

இதையடுத்து, அமெரிக்கா முழுவதும் விமான சேவை முடங்கியது. 5,000 க்கும் மேற் பட்ட உள்நாட்டு, சர்வதேச விமானங்கள் ஆங்காங்கே உள்ள விமான நிலையங்களில் தரையிறக்கப்பட்டன. 600 விமான சேவைகள் முழுமையாக ரத்து செய்யப்பட்டன.

இதன் காரணமாக அமெரிக்க விமான நிலையங்களில் ஆயிரக்கணக்கான பயணிகள் பரிதவித்து வருகின்றனர்.

உக்ரைன் போர் காரணமாக அமெரிக்கா, ரஷ்யாவுக்கு இடையே மோதல் அதிகரித்து வருகிறது. ரஷ்யாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு கடலுக்கு அடியில் ராட்சத குழாய் மூலம் இயற்கை எரிவாயு விநியோகம் செய்யப்பட்டு வந்தது. இந்த ராட்சத குழாய் மர்மமான முறையில் தகர்க்கப்பட்டது. இதன் பின்னணியில் அமெரிக்கா இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. அத்துடன், உக்ரைனுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆயுதங் களை வழங்கி வருகிறது.

இதற்குப் பழிவாங்கும் வகையில் ரஷ்ய ஹக்கர்கள், அமெரிக்க விமானப் போக்குவரத்துத் துறையின் இணையக் கட்டமைப்பின் மீது தாக்குதல் நடத்தியிருக்கக்கூடும் என்று சமூக வலைதளங்களில் தகவல்கள் பரவி வருகின்றன. ரஷ்யாவின் நட்பு நாடுகளான சீனா, வடகொரியா உள்ளிட்ட நாடுகளின் ஹேக்கர்களும் கைவரிசை காட்டியிருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

அமெரிக்கா மறுப்பு: இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி மாளிகை நேற்று வெளியிட்ட அறிக்கையில், "சைபர் தாக்குதல் நடந்ததாக தெரியவில்லை. எனினும், இந்த விவகாரம் குறித்து முழுமையாக விசாரணை நடத்தப்படும்" என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

பொதுவாக, விமான சேவை பாதிப்பு தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி மாளிகை எவ்வித விளக்கமும் அளிப்பது கிடையாது. அமெரிக்க வரலாற்றில் முதல் முறையாக விமான சேவை பாதிப்பு குறித்து ஜனாதிபதி மாளிகை விளக்கம் வெளியிட்டிருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது. (அ)



# மீண்டும் முகக் கவசம் அணிவதற்கு உலக சுகாதார அமைப்பு பரிந்துரை!

நியூயோர்க், ஜன. 13

சீனாவில் கொரோனாப் பரவல் தீவிரமடைந்துவரும் நிலையில், நீண்ட விமானப் பயணங்கள் மேற்கொள்ளும் பயணிகள் முகக்கவசம் அணிவதற்கு நாடுகள் பரிந்துரைக்கவேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

எக்ஸ்.பி.பி. 1.5 எனும் புதிய ஒமிக்ரோன் வைரஸ் திரிபு அமெரிக்காவில் வேகமாகப் பரவும் வேளையில் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவிலும் இந்த வைரஸ் திரிபு பரவுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதிகமான கோவிட்-19 பரவல் உள்ள இடங்களில் இருந்து வரும் பயணிகளுக்கு முகக்கவசம் அணிவதற்கான பரிந்துரை விடுக்கப்பட வேண்டும் என்று ஐரோப்பாவுக்கான உலக சுகாதார அமைப்பின் மூத்த அதிகாரி கேட்டுக்கொண்டார்.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒமிக்ரோன் வகை வைரஸ் திரிபுகளில் எக்ஸ்.பி.பி. 1.5 மிக வேகமாகப் பரவக்கூடியது.

அமெரிக்காவில் ஜனவரி 7ஆம் திகதி முடிவுற்ற வாரத்தில் பதிவான கொவிட் சம்பவங்களில் சுமார் 28 வீதத்துக்கு அதுவே காரணம்.

புதுவகை வைரஸால் மீண்டும் உலகளவில் நோய்ப் பரவல் ஏற்படுமா என்பது தற்போதைக்குத் தெளிவாகத் தெரியவில்லை என்று நிபுணர்கள் கூறினர்.

எனினும் தற்போதுள்ள தடுப்புமருந்துகள் கடுமையான பாதிப்பையும் மரணத்தையும் தவிர்க்க உதவும் என்று அவர்கள் குறிப்பிட்டனர். (அ)

# ஒருநாள் போட்டி தரவரிசை விராட் கோலி முன்னேற்றம்!



*டுபாய், ஜன. 13*

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் போட்டி வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை நேற்று வெளியிட்டது.

இதன்படி துடுப்பாட்ட தரவரிசையில் பாகிஸ்தான் அணித்தலைவர் பாபர் அசாம் முதலிடத்திலும், தென்னாபிரிக்காவின் வன்டெர் டுஸன் 2ஆவது இடத்திலும், பாகிஸ்தானின் இமாம் உல்-ஹக் 3ஆவது இடத்திலும் நீடிக்கின்றனர்.

இலங்கைக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் சதம் அடித்த இந்திய வீரர் விராட் கோலி 2 இடம் முன்னேறி 6-வது இடத்தை பிடித்துள்ளார். இதே துடுப்பாட்டத்தில் 83 ஓட்டங்கள் விளாசிய ரோஹித் சர்மா ஓரிடம் உயர்ந்து 8ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

பந்து வீச்சாளர்களில்முதல் இடங்களில் மாற்றமில்லை. நியூசிலாந்தின் டிரென்ட் போல்ட் முதலிடத்தில் நீடிக்கின்றார்.

20 ஓவர் துடுப்பாட்ட தரவரிசையில் இந்திய வீரர் சூர்யகுமார் யாதவ் 908 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறார். 20 ஓவர் துடுப்பாட்ட வீரர் வரிசையில் -10 இடத்துக்குள் உள்ள ஒரே இந்தியர் அவர் தான்.

டெஸ்ட் துடுப்பாட்ட தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் மோர்னஸ் லபுஷான் முதல்நிலை வீரராக வலம் வருகிறார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி டெஸ்டில் 195 ஓட்டங்கள் குவித்த அவுஸ்திரேலிய வீரர் உஸ்மான் கவாஜா 4 இடங்கள் ஏற்றம் கண்டு 8ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

# ஆப்கான் தொடரிலிருந்து விலகியது அவுஸ்திரேலியா!



*சிட்னி, ஜன. 13*

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடுவதிலிருந்து விலகிக் கொள்வதாக கிரிக்கெட் அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் பெண்கள் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதற்குக் கடந்த டிசெம்பர் மாதம் தலிபான் அரசு தடைவிதித்தது. பிறகு தொண்டு நிறுவனங்களில் பெண்கள் பணியாற்றுவதற்கும் தடைவிதிக்கப்பட்டது. ஆப்கானிஸ்தானில் பெண்கள் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்பதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

மார்ச்சில் அவுஸ்திரேலியாவும் ஆப்கானிஸ்தானும் ஐக்கிய அரபு அமீரகத்தில் மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவிருந்தன. இந்நிலையில் ஆப்கானிஸ்தானில் பெண்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து விலகிக் கொள்வதாக கிரிக்கெட் அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் பெண்களின் கல்விக்கும் வேலை வாய்ப்புக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தான் உள்பட ஆடவர் மற்றும் மகளிர் விளையாட்டுகளின் முன்னேற்றத்துக்கு கிரிக்கெட் அவுஸ்திரேலியா ஆதரவளிக்கிறது. ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபையுடன் இணைந்து அந்நாட்டு பெண்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுவதற்கு கிரிக்கெட் அவுஸ்திரேலியா பாடுபடும். இவ்விஷயத்தில் ஆதரவு அளித்த அவுஸ்திரேலிய அரசுக்கு நன்றி என்று கிரிக்கெட் அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

# கொன்வே அதிரடி சதம் நியூசிலாந்து இலகு வெற்றி!

*கராச்சி, ஜன. 13*

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் கொன்வே சதம் கைகொடுக்க நியூசிலாந்து அணி 79 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் சென்றுள்ள நியூசிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

இரண்டாவது போட்டி கராச்சியில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

நியூசிலாந்து அணிக்கு ஆலன் (1) ஏமாற்றினார். கொன்வே, அணித்தலைவர் வில்லியம்சன் இணை அசத்தியது. கொன்வே (101) சதம் கடந்தார்.

வில்லியம்சன் 85 ஓட்டம் விளாசினார். முகமது நவாஸ் 'சுழலில்' மிட்சல் (5), டாம் லதாம் (2) உள்ளிட்டோர் சிக்கினர்.

நியூசிலாந்து அணி 49.5 ஓவரில் 261 ஓட்டங்களுக்கு பாகிஸ்தான் சார்பில் அதிகபட்சமாக நவாஸ் 4 விக்கெட் கைப்பற்றினார்.

பாகிஸ்தான் அணிக்கு பகர் ஷமான் (0), இமாம் உல் ஹக் (6) சொதப்பினர். சாண்ட்னர் 'சுழலில்' ரிஸ்வான் (28) ஆட்டமிழந்தார். கப்டன் பாபர் ஆஸம் (79) மட்டும் அரைச்சதம் கடந்தார். பாகிஸ்தான் அணி 43 ஓவரில் 182 ஓட்டங்களுக்கு சுருண்டு 79 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. நியூசிலாந்து சார்பில் சௌதி, சொதி தலா 2 விக்கெட் கைப்பற்றினர். தொடர் 1:1 என சமநிலையில் உள்ளது.





# அம்மாவாகிறார் ஒசாகா! தற்காலிக ஓய்வு அறிவிப்பு!

*ரோக்கியோ, ஜன.*

விரைவில் குழந்தை பிறக்கவுள்ளதால் இந்த வருடம் எந்தப் போட்டிகளிலும் கலந்துகொள்ளப் போவதில்லை என ஜப்பானைச் சேர்ந்த பிரபல வீராங்கனை ஒசாகா அறிவித்துள்ளார்.

25 வயது ஒசாகா செப்ரெம்பருக்குப் பிறகு எந்தப் போட்டிகளிலும் விளையாடவில்லை. 2023 அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டியிலும் கலந்துகொள்ளவில்லை என்றும் சமீபத்தில் அறிவித்தார்.

அமெரிக்காவைச் சேர்ந்த பாடகர் கார்டே டன்ஸ் டனை 2019 முதல் காதலித்து வருகிறார் ஒசாகா. இருவரும் தங்களுடைய முதல் குழந்தையை விரைவில் எதிர்பார்க்கிறார்கள். இதுபற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒசாகா கூறியதாவது:

எதிர்காலத்தில் நான் சாதிக்க நிறைய உள்ளது என்று தெரியும். என் குழந்தை என் ஆட்டங்களைப் பார்ப்பதையும் மற்றவர்களிடம் அவர் என் அம்மா என்று சொல்லப் போவதையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். 2023 எனக்குப் புதிய பாடங்களைக் கற்றுத் தரும் வருடமாக இருக்கப் போகிறது. 2024 அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டியில் அனைவரையும் சந்திக்கிறேன். குறிப்பு - வாழ்க்கையில் சரியான பாதை என்று எதுவுமில்லை. ஆனால் நல்ல எண்ணங்களுடன் இருந்தால் உங்களுக்கான வழியைக் கண்டடைவீர்கள் என்று கூறியுள்ளார்.

முதல்நிலை வீராங்கனையாக இருந்த ஒசாகா தரவரிசையில் தற்போது 47ஆவது இடத்தில் உள்ளார்.

நான்கு முறை ஒற்றையர் பிரிவில் கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்றுள்ளார். தற்போது அமெரிக்காவில் வசிக்கிறார். 2022-ம் ஆண்டில் அதிக வருமானம் (ரூ. 417 கோடி) ஈட்டிய வீராங்கனை என ஒசாகாவை போர்ப்ஸ் இதழ் குறிப்பிட்டுள்ளது.

# எஸ். ஏ. இருபது - 20 கிரிக்கிகெட் லீக் வெற்றியுடன் ஆரம்பித்தது ஜோபர்க்!



*டர்பன், ஜன. 13*

எஸ். ஏ. 20 கிரிக்கெட் லீக் தொடரில் டர்பன் சுப்பர்' ஜெயன்ட்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது ஜோபர்க் சுப்பர் கிங்ஸ். ஜோபர்க் அணி 190ஃ6 ஓட்டங்களையும், டர்பன் சுப்பர் ஜெயன்ட்ஸ் 174/5 ஓட்டங்களையும் எடுத்தன.

இரு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் டர்பன் கிங்ஸ்மீட் மைதானத்தில் புதன்கிழமை இரவு நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற ஜோபர்க் சுப்பர் கிங்ஸ் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. தொடக்க பேட்டர்கள் சோபிக்காத நிலையில், அணித் தலைவர் டு பிளசிஸ் 39, ரொமாரியோ ஷெப்பர்ட் 40 ஓட்டங்களையும் விளாசினர்.

நடுவரிசையில் டோனவன் பெரைரா 5 சிக்ஸர், 8 பௌண்ட்ரிகளுடன் 40 பந்துகளில் 82 ஓட்டங்களை விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தார். ஜோர்ஜ் கார்ட்டன் 4 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 190/6 ஓட்டங்களைக் குவித்தது ஜோபர்க். டர்பன் அணி தரப்பில் சுப்ரேயன் 2-26 விக்கெட்களை சாய்த்தார்,.

191 ஓட்டங்கள் என்ற கடினமான வெற்றி இலக்குடன் களம் கண்ட டர்பன் அணியில் அணித்தலைவர் குயின்ரன் டி கொக், கைல் மேயர்ஸ் அற்புத தொடக்கத்தை அளித்தனர். மேயர்ஸ் 39 ஓட்டங்களுடன் வெளியேறினார். டி கொக் தலா 5 சிக்ஸர், பௌண்ட்ரிகளுடன் 52 பந்துகளில் 78 ஓட்டங்களை விளாசி ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் வந்த ஹென்றிச் கிளாஸன் 20, முல்டர் 10, பிரிட்டோரியஸ் 14 ஓட்டங்களுடன் வெளியேறினர். இறுதியில் 20 ஓவர்களில் 174 /5 ஓட்டங்களை மட்டும் எடுத்து தோல்வியைத் தழுவியது டர்பன். ஜோபர்க் தரப்பில் அல்ஸாரி ஜோசப் 2-30 விக்கெட்டை வீழ்த்தினார்.

# தேர்தலின் பெறுபேறுகள் தமிழர்களின் சிறந்த தலைமைக்கு பாதை திறக்கும்!

## நம்பிக்கை வெளியிடுகிறார் சிறிதரன்



**கிளிநொச்சி, ஜன.13**

**இந்த தேர்தலின் பெறுபேறு கள் தமிழ் மக்களுக்கான சிறந்த தலைமைக்கான பாதையைத் திறந்துவிடும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.**

அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நாம் செலுத்தியுள்ளோம். கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணம் கிளிநொச்சி தெரிவத்தாட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட்டதாக எனக்கு தெரியவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும், பாராளுமன்ற குழுவுக்கும் இரா சம்பந்தனே தலைமை வகித்துக்கொண்டிருக்கிறார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தான் பாராளுமன்றத்திலும், சர்வதேச சமூகத்திலும் அடையாளமாகக் கொண்டிருக்கிறது. ஆகவே இது ஒரு உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள். இந்த தேர்தலின் வடிவம், தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் செயற்பாடுகளின் அடிப்படையில் மக்கள் தெரிவு செய்யவுள்ளனர்.

அதற்கான களப் பரீட்சையாக இதை பார்க்கலாம். இதில் சாதக பாதக நிலை ஏற்படலாம். இன்று வெளியான செய்திகளினடிப்படையில், எமது தலைவர் ஓரிரு நாட்களில் இது தொடர்பில் அறிக்கை ஒன்றின் ஊடாக தெளிவுபடுத்த உள்ளதாக அறிய முடிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் ஏன் தனித்தனியாக போட்டியிட வேண்டிய தேவை ஏற்பட்டது என்பது தொடர்பில் அவர் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளார்.

ஆகவே பொறுப்பு வாய்ந்த கட்சியின் உறுப்பினர் என்ற வகையில், அவரது அறிக்கை வரும்வரை பொறுமையோடும், நிதானத்தோடும் இந்த விடயங்களை கையாள்வதே பொருத்தம் என நான் கருதுகிறேன்.

இதனால் எந்தப் பாதகமும் தமிழ் மக்களுக்கு வராது. கடந்த காலங்களில் நாங்கள் ஓர் இலக்கை நோக்கி நகர்ந்திருக்கிறோம். இங்கு நாங்கள் பிழை பிடிப்பது நோக்கமல்ல. அல்லது யார் மீதும் குற்றம் சுமத்துவதும் நோக்கமல்ல. தனிநாட்டு கனவோடு பயணித்த நாங்கள் யுத்தம் முடிவுற்ற பின்பும் அதே கனவோடு ஒரே அணியாக பயணித்தோம். ஆனால் ஒற்றுமையாக செல்ல முடியாத மனதை நெருடுகின்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாகத் தன் தன் கட்சிகளை வளர்க்கின்ற செயற்பாடுகள் நெருக்கடிகளை தந்தன. அவற்றை சீர்செய்ய பல முயற்சிகள் எடுக்கப்பட்டன.

அந்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இந்த தேர்தல் புதிய ஒழுங்குமுறையை உருவாக்கும். இந்த தேர்தலின் பெறுபேறுகள் தமிழ் மக்களுக்கான சிறந்த தலைமைக்கான பாதையைத் திறந்துவிடும் என்று நம்புகிறேன்.

இப்பொழுதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றது. அது உடைந்துபோய் இருப்பதாக கருதி அதனைக் கட்டியெழுப்பவேண்டிய அவசியம் இல்லை. அவ்வாறு கட்டியெழுப்பப்படவேண்டிய சூழல் ஏற்பட்டால் அதற்காகச் செல்ல முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்திலும், வெளியிலும் ஒன்றாகவே உள்ளது. - என்றார். (அ)

*மின் கட்டண அதிகரிப்பு விவகாரம்*

# பொது பயன்பாடுகள் ஆணைக்குழு சுயாதீனமாகச் செயல்படவேண்டும்!

*கொழும்பு, ஜன. 13*

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மின் பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரத்ன இதனைத் தெரிவித்தார்.

மின் கட்டண அதிகரிப்பின் மூலம் மக்களுக்கோ, மின்சார சபைக்கோ அநீதி ஏற்படக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# நெடுங்கேணி பிரதேசத்தின் பண்பாட்டு விழா நடந்தது



*வவுனியா, ஜன. 13*

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச பண்பாட்டு விழா பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலாளர் பி.ஏ. சரத்சந்திர பிரதம விருந்தினராகவும் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், நெடுங்கேணி பிரதேச சபைத் தலைவர் த.பார்த்தீபன், வவுனியா பல்கலைக்கழகப் பண்பாட்டு மையப் பணிப்பாளர் ச.திலகநாதன், பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

கிராமிய கலாசாரப் பண்பாட்டு அம்சங்களுடன் நேர்த்தியாக அமைக்கப்பட்ட மேடையில் முன்னாள் பிரதேச செயலர் க.பரந்தாமன் அரங்கில் பண்பாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் முக்கிய அம்சமாக மருதமுகிழ் பிரதேச மலரின் பத்தாவது மலர் வெளியிடப்பட்டது. பிரதேசத்தில் கலைத் துறைக்குப் பங்காற்றி வருகின்ற முதுகலைஞர்களுக்கு கலை ஆழி விருதும் இளம் கலைஞர்களுக்கு கலைத் தென்றல் விருதும் வழக்கப்பட்டது. (அ)

# உள்ளூராட்சி தேர்தல் குறித்து இன்னும் இறுதி முடிவு இல்லை

## கூறுகின்றது ஐக்கிய தேசிய கட்சி

*கொழும்பு, ஜன. 16*

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.



உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு ஐக்கிய தேசிய கட்சி தயாராக இருக்கின்றது.

எனினும், இந்த தேர்தலுக்கு முகம்கொடுப்பது தொடர்பாக தற்போது கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகிறோம்.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவ குழு ஏனைய கட்சிகளுடன் இது தொடர்பாக கலந்துரையாடி வருகின்றது.

அந்த வகையில் தற்போது பொதுஜன பெரமுன கட்சியுடன் கலந்துரையாடியுள்ளதுடன், ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம்.

அத்துடன் தேர்தல் போட்டியிடுவது தொடர்பாக அனைத்துக் கட்சிகளுடன் கலந்துரையாடிய பின்னர், தேரதலில் எவ்வாறு போட்டியிடுவது என தீர்மானிக்கப்படும்.

அந்த தீர்மானம் கட்சியின் செயற்குழுவில் விடப்பட்டு, செயற்குழு அனுமதி வழங்கிய பின்னரே ஐக்கிய தேசிய கட்சி தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்ற தீர்மானம் நாட்டுக்கும் கட்சி ஆதரவாளர்களுக்கும் அறிவிக்கப்படும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அனைத்து கட்சிகளையும் இணைத்துக்கொண்டு ஐக்கியமாக ஒன்றாக பயணிப்பதே எங்களது நோக்கம்-என்றார். (அ)

# மரண அறிவித்தல்



**திருமதி**

**சறோஜினிதேவி இராஜகோபால்**

யாழ். அளவெட்டி, பள்ளியவத்தையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன் Eastham ஐ வதிவிடமாகவும் கொண்ட சறோஜினிதேவி இராஜகோபால் கடந்த 08-01-2023 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் ( ஆசிரியர் ) - கைலாயம் ( ஆசிரியை ) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் (நொத்தாரிஸ்) - தெய்வானைப்பிள்ளை, கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், வை.இராஜகோபால் (ஓய்வு பெற்ற சுகாதார அரசினர் திணைக்கள அதிகாரி, கணக்காளர் ZUBAIR FURNISHING LLC Company, Muscat,Oman) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற தெ.நடராஜா ( ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், சதானந்தா வித்தியாலயம் அளவெட்டி ) அவர்களின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, வனஜலோயினி, சுபத்திராதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராஜினி, இராஜிபன் (உரிமையாளர் Group Blue Van Paris), சுபாஜினி, நிலாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும்,சுரேந்திரன், சுலோஜினி, காலஞ்சென்ற நாகேஸ்வரன் (Megaa Super Store Founder), நித்தியகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,கீர்த்தனா, ஆர்த்திகா, எமிலி சோபிதா, எரிக்ருக்ஷன், டிலக்ஷா, டிலக்ஷன், நித்திலன், லஷானா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் எதிர்வரும் 19.01.2023 காலை 07.00 - 10.00 மணியளவில் victoria house, 10 woolwich way, beckton, London E 65PA United kingdom என்ற முகவரியில் நடைபெற்று பின்னர் நண்பகல் 11.00 மணியளவில் Manor park cemetery & Crematorium, Sebert Road, London E7 0NP ,United kingdom என்ற முகவரியில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :

**நிலா - மகள் : +447949646914**
**இராஜினி - மகள் : +447405011521**
**இராஜிபன் - மகன் : +33609713576**
**சுபாஜினி - மகள் : +447918195888**

தகவல் :
**குடும்பத்தினர்**

## ஒற்றுமைப்பட...

தமிழ் மக்களின் பிரச்னை தீர்வுக்காக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும் என்று வலியுறுத்தி புதுக்குடியிருப்பில் வேலுப்பிள்ளை மாதவமேஜர் என்பவர் கடந்த திங்கட்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினரான இவர், தொடர்ச்சியாக சமூக செயல்பாடுகளிலும் ஈடுபட்டு வருபவரான இவர் கடந்த நான்கு நாட்களாக போராட்டத்தை முன்னெடுத்து வந்தார். இந்த நிலையில், போராட்டத்துக்கு ஆதரவாக நேற்றைய தினம் புதுக்குடியிருப்பிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு ஆதரவு தெரிவிக்கப்பட்டிருந்தது.

மாதவமேஜர் உண்ணாவிரதம் இருக்கும் இடத்தில் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து உணர்வாளர்கள் - பொது மக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு கூடியிருந்தனர்.

அந்தசமயம் அங்கு, தமிழ் மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) செல்வம் அடைக்கலநாதன், இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிறேமசந்திரன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சார்பில் வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் க. சிவநேசன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மேனன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

உண்ணாவிரதத்தை நிறைவு செய்யும் விதமாக அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் - பிரதிநிதிகள் ஒப்பமிட்டு உறுதிமொழி கடிதம் அளிப்பதாக ஏற்பாடாகியிருந்தது. இந்த நிலையில், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உரையாற்றினர். ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாக அவர்களின் உரைகள் அமைந்ததுடன், அதற்கான வேலைத்திட்டங்களை செய்வதாகவும் உறுதியளித்தனர்.

நிகழ்வில் உரையாற்றிய தமிழரசு கட்சியின் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம். பி., "நாம் பிரிந்து செயல்படவில்லை. வாக்குகள் சிதறி சிங்கள கட்சிகளுக்கு சாதகமான நிலைமை உருவாகக்கூடாது என்பதற்காக தந்திரோபயமாக செயல்படுகிறோம். உள்ளூராட்சி தேர்தல் முடிவடைந்த பின்னர் நாம் ஒன்றாகப் பயணிப்போம்", என்று கூறினார்.

அவரின் உரையைத் தொடர்ந்து 10 நிமிடங்கள் வரையே அங்கிருந்த சார்ள்ஸ் நிர்மலநாதன் உறுதிமொழி ஆவணத்தில் கையொப்பமிடாமலேயே அங்கிருந்து சென்றார். இது அங்கிருந்தவர்களின் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

உறுதிமொழி ஆவணம் உண்ணாவிரத போராட்டக்காரரான வேலுப்பிள்ளை மாதவமேஜரிடம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, நீராகாரம் வழங்கப்பட்டு அவரின் உண்ணாவிரதம் நிறைவுறுத்தப்பட்டது. (ஐ)

## எங்கள் அரசியல்...

தெரிவித்துள்ளார்.

சென்னை கலைவாணர் அரங்கில் இடம்பெற்ற அயலக தமிழர் தின நிகழ்வில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அயலக தமிழர் தின நிகழ்வானது உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு புத்துணர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. விசேடமாக, நலிந்து, மெலிந்து இருக்கின்ற இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு எழுச்சியைக் கொடுத்திருக்கின்றது. எமக்கு ஒன்று என்றால் வெறும் முப்பது கிலோமீற்றர்கள் தொலைவிலே உள்ள தமிழகத்தில் எமது அண்ணன் இருக்கின்றான் என்ற நம்பிக்கையுடனும், பெருமையுடனும் இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

தலைநிமிர்ந்து நிற்பதற்காக நாம் ஆயுதங்களை ஏந்திக்கூடப் போராடினோம். எனினும், எமது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக எவ்விதமான விட்டுக்கொடுப்புகளையும் செய்யாது தொடர்ச்சியான பேச்சுகள் மற்றும் சாத்வீகப் போராட்டங்கள் ஊடாக அதனை அடைவோம் என்ற உறுதியோடு இருக்கின்றோம்.

தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வாதற்காக புதிய ஜனாதிபதியுடன் பேச்சுகளை ஆரம்பித்துள்ளோம். அந்தப் பேச்சில் தளர்வுகள் காணப்படுகின்றன. இந்நிலையில் நான் இந்த மாநாட்டுக்கு வருகை தருவதற்கு முதல்நாளில்கூட நடந்த பேச்சில் இணங்கிய விடயங்களை செயல்படுத்த ஒருவாரகால அவகாசம் அளித்துள்ளோம்.

இவ்வாறான நிலையில் எங்கள் அரசியல் போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டுமென தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அண்ணனிடத்திலும், ஏனைய நாடுகளின் தலைவர்களிடத்திலும் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ஐ)

## இந்தியாவின்...

வரும் பெப்ரவரி 11ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. இது தொடர்பான ஏற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், 75ஆவது சுதந்திர தின வைபவத்துக்கான ஏற்பாடுகள் தொடர்பில் வினவியபோது இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் பெப்ரவரி 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. எமது வலியுறுத்தலின் பேரில், இரண்டு வருடங்களின் பின்னர் மீண்டும் சுதந்திர தினத்தன்று தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்படவுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவர் சுதந்திர தின வைபவத்தில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. எனினும், இந்நிகழ்வில் அவர் பங்குபற்றாவிட்டால், பெப்ரவரி 11ஆம் திகதி இந்திய நிதியுதவியை கொண்டு அமைக்கப்பட்ட யாழ். கலாசார நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொள்வார் - என்றார். (ஐ)

## புதிய மின்...

திருத்தம் நடைமுறையில் இருக்கும் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

புதிய திருத்தத்தின்படி, புதிய மின் கட்டண திருத்தத்தின் கீழ், வீட்டு உபயோகத்துக்காக 0 முதல் 30 வரையான அலகுகளுக்கான நிலையான கட்டணம் 400 ரூபாயாகவும், 30 முதல் 60 அலகுகளுக்கான நிலையான கட்டணம் 550 ரூபாயாகவும் உயரும்.

அத்துடன், 60 முதல் 90 வரையான அலகுகளுக்கு 650 ரூபாய், 90 முதல் 180 அலகுகளுக்கு 1500 ரூபாய், 180 மின்சார அலகுகளுக்கு மேல் 2 ஆயிரம் ரூபாய் அறவிடப்படும் என மின்சார சபையின் பொது முகாமையாளர் பொறியியலாளர் ரொஹான் செனவிரத்ன அறிவித்துள்ளார்.

இதேவேளை, கைத்தொழில்களுக்கான மின் கட்டண அதிகரிப்புக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## விபத்தில்...

இடம்பெற்ற இந்த விபத்தில் கோண்டாவில் வடக்கை சேர்ந்த ராமன் தர்மலிங்கம் (வயது 81) என்பவரே உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்தவரை அங்குநின்றவர்கள் உடனடியாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தபோதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## புதிய தமிழ்...

தார்த்தன் தலைமையிலான புளொட், க. வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, சுரேஷ் பிறேமசந்திரன் தலைமையிலான ஈ. பி. ஆர். எல். எவ்., என். சிறீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி என்பன பேச்சு நடத்தின.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் தலைமையிலான அணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பனவற்றை இணைப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது. எனினும், இது தொடர்பில் உறுதியான முடிவு அறிவிக்கப்படவில்லை.

அத்துடன், கட்சியின் பொதுச் சின்னம் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டது. எனினும், இது தொடர்பிலும் இறுதியான முடிவு எட்டப்படவில்லை.

இந்த நிலையில், இந்தக் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் இன்றைய தினம் கூடிப் பேசவுள்ளனர். இதில், இணக்கம் காணப்பட்ட பின்னர் - நாளை சனிக்கிழமை இந்தக் கட்சிகள் ஒன்றிணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் என்று கூட்டமைப்பின் முக்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையே, கூட்டமைப்பின் சின்னம் தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணிக்குள் குழப்பம் நீடிப்பதாக நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. எனினும், இது விடயம் தொடர்பில் இறுதியான - உறுதியான தகவல்கள் வெளியிடப்படவில்லை. (ஐ)

## மைத்திரிபால...

பர் பூஜித் ஜயசுந்தர மற்றும் நிலந்த ஜயவர்தன ஆகியோருக்கு தலா ரூ.75 மில்லியன் செலுத்தவேண்டும் எனவும், முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ரூ. 50 மில்லியன் செலுத்தவேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி, பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட உள்ளதாக, போதியளவு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தபோதிலும், அதனைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளாதமை மூலம், தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக குற்றம் சுமத்தி, உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் மீதான தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவர் கொண்ட நீதியரசர்கள் ஆயம் இந்தத் தீர்ப்பை அறிவித்தது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சிசிர மெண்டிஸ் மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தன ஆகியோர் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியதன் மூலம் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபாவும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 50 மில்லியன் ரூபாவும், முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தன ஆகியோர் 75 மில்லியன் ரூபாவும், தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சிசிர மெண்டிஸ் 10 மில்லியன் ரூபாவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடாக செலுத்தப்பட வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குறித்த அடிப்படை உரிமை மனுக்கள் மீதான தீர்ப்பு நேற்று அறிவிக்கப்படும் என, கடந்த 5ஆம் திகதி உயர்நீதிமன்றம் அறிவித்திருந்தது.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாத குண்டுத் தாக்குதல்களில், 269 பேர் கொல்லப்பட்டதுடன், 500 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

குறித்த குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட மேலும் சில தரப்பினரால் 12 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அந்த மனுக்களின் பிரதிவாதிகளாக, முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ உள்ளிட்டோர் பெயரிடப்பட்டுள்ளனர். (அ)

## டிவகலாலா...

களில் வடக்கு முதல் நிலையிலும், கிழக்கு இரண்டாவது நிலையிலும் இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை சனிக்கிழமை இல. 127, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## மண்டைதீவில்...

மாகாண ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலிலேயே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

சர்வதேச மைதானத்துக்காக ஏற்கனவே 50 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், மைதானத்துக்காக 100 ஏக்கர் வரை தேவைப்படுகிறது. அதனைப் பெறுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஜிம்னாஸ்ரிக் அரங்கம், விளையாட்டு மைதானங்களை அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. (ஐ)

## எந்த கட்சியுடனும்...

போட்டி போடுவதை ஏற்கனவே நாம் மக்களுக்குத் தெளிவுபடுத்தியிருந்தோம். தற்சமயம் இடம்பெறும் போட்டிகள், கட்சித்தாவல்கள் போன்றவற்றை மக்கள் தற்போது அறியும் போது இதுவரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறி வந்த செய்தி உண்மையாக்கப்பட்டுள்ளது.

நாம் ஒரு விடயத்தில், உறுதியாக உள்ளோம். கூட்டணி என்ற கதைக்கே இடம் கிடையாது. கூட்டணி ஆகட்டும் தமிழரசு ஆகட்டும் ஒற்றையாட்சிக்கு ஆதரவளித்த கட்சிகள். மாறாக மாவீரர்களின் தியாகத்துக்கு புறம்பாக செயல்படும் எவரோடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேச்சு நடத்தவோ இணைந்து செயல்படவோ போவதில்லை - என்றார். (ஐ)

## தேர்தலுக்கான...

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை பெற்றுக்கொள்ள முடியாது என வெளியாகின்ற கருத்துகள் தொடர்பில் திறைசேரி அதிகாரிகளை நேற்று அழைத்து தேர்தல்கள் ஆணைக்குழு வினவியுள்ளது.

தேர்தல் என்பது அரசமைப்பு சார்ந்த விடயம் என்பதால், அதற்கு தேவையான நிதி எவ்வித தடையும் இன்றி பெற்றுக் கொடுக்கப்படும் என இதன் போது திறை சேரி அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைமை நிதி அதிகாரி ஆகியோர் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

ஈழநாடு
Eelanadu

# வேட்புமனு தாக்கல் நிறைவுற்றதும் தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 13

**வேட்புமனு தாக்கல் நிறைவடைந்ததும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் திகதி தீர்மானிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.**

அரசியலமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது தேர்தல் நடத்தும் அலுவலர்களால் கட்டுப்பணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவதாகவும், வேட்புமனுக்கள் ஏற்கும் பணி எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகவும் அவர் கூறினார்.

எதிர்வரும் 21ஆம் திகதி நண்பகல் வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும்,

சம்பிரதாயங்கள் நிறைவடைந்தவுடன் தேர்தல் தின அறிவிப்பு வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு அழைத்தபோதிலும் அவற்றைக் கலைக்கும் அதிகாரம் தமக்கு இல்லை எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ)

# அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலை குறைப்பு

கொழும்பு, ஜன. 13

லங்கா சதொச நிறுவனம் நான்கு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை மீண்டும் குறைத்துள்ளது.

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 5 ரூபாவினால் குறைக்கப்பட்டு 240 ரூபாய்க்கும், உள்ளூர் சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 5 ரூபாவினால் 220 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும், ஒரு கிலோ கிராம் வெள்ளை அரிசி 16 ரூபாயினால் குறைக்கப்பட்டு 189 ரூபாய்க்கும், நாட்டு அரிசி ஒரு கிலோ கிராம் 7 ரூபாய் குறைக்கப்பட்டு 198 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படவுள்ளது. (அ)

# போலி தலதா மாளிகை விவகாரத்தில் பொலிஸ் அதிகாரியிடமும் விசாரணை

கொழும்பு, ஜன. 13

போலி தலதா மாளிகையை நிர்மாணித்து வந்த சர்ச்சைக்குரிய பிரமுகர் ஜனக சேனாதிபதிக்கு பொத்துஹெர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பாதுகாப்பு வழங்கியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் குருநாகல் பிரதி பொலிஸ் மா அதிபர் அனில் பிரியந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

பொலிஸ் பொறுப்பதிகாரி, சேனாதிபதியை பின்பற்றுபவர் என்று பல புகார்கள் வந்துள்ளதாகவும், பொறுப்பதிகாரி அவரை வணங்குவதைக் காட்டும் சில புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களுடன் இருப்பதாகவும் பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சேனாதிபதியின் நெருங்கிய சீடர் ஒருவருக்கு எதிராக கண்டியில் உள்ள கட்டுமான ஒப்பந்ததாரர் ஒருவரால் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடு பொறுப்பதிகாரியால் முறையாக விசாரிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை செஞ்சிலுவை சங்கத்தால் 500 குடும்பங்களுக்கு அவசர உதவி!



கிளிநொச்சி, ஜன. 13

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் 500 குடும்பங்களுக்கு அவசர உதவி வழங்கும் நிகழ்வு நேற்று ஆரம்பமானது. அதன் முதல் நிகழ்வு நேற்று கரைச்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 150 குடும்பங்களுக்கு 18 ஆயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகனன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி கிளை தலைவர் சேதுபதி, செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வழங்கப்பட்ட வவுச்சர்கள் மூலம், மருந்து பொருட்கள், உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# யாழ். பல்கலைக்கழகத்தில் மலையக தியாகிகள் நினைவு



யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் மற்றும் மலையக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12:00 மணியளவில் மலையக தியாகிகள் நினைவேந்தல் யாழ்.பல்கலைக் கழக பிரதான நினைவுத்தூபியில் நடைபெற்றது.

மலையகத் தமிழர்களுக்கான தொழிற்சார் மற்றும் இதர உரிமைகளை வென்றெடுப்பதற்கான உரிமை போராட்டத்தில் உயிர்நீத்த அனைத்து தியாகிகளும் குறித்த நினைவேந்தலில் நினைவுகூரப்பட்டனர்.

இதன்போது மலையக வாழ மக்களின் அறப் போராட்டங்களில் உயிர்நீத்த தியாகிகளின் நினைவுருவப் படத்திற்கு ஈகச் சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தி அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

இதில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர், மலையக மாணவர் ஒன்றியத்தின்,கல்விசாரா ஊழியர்கள்,மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# வடக்கை குறிவைக்கும் கருணா, பிள்ளையான்!

கொழும்பு, ஜன. 13

பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தின் சில உள்ளூராட்சிச் சபைகளில் போட்டியிடவுள்ளது.

அந்தக் கட்சியின் சார்பில் வேட்புமனுத் தாக்கல் அல்லது கட்டுப்பணம் செலுத்துவதற்காக பிள்ளையான் யாழ்ப்பாணத்துக்கு வருவார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன், கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனது கட்சியும் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கிலுள்ள சில சபைகளில் போட்டியிடவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மரண அறிவித்தல்



## சுந்தரம் டிவகலாலா

**தோற்றம்** 05.10.1942 — **மறைவு** 12.01.2023

வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளரும் தன் வாழ் நாட்களை பொது சேவைக்காக அர்ப்பணித்த பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய இலங்கை பொதுச் சேவை அதிகாரியுமான யாழ் இந்துவின் மைந்தன் திரு சுந்தரம் டிவகலாலா ஜனவரி 12ஆம் திகதி வியாழக்கிழமை மனைவி, பிள்ளைகள் அனைவரையும் தன் அருகில் அழைத்து பிரியாவிடை கொடுத்து இந்த உலகை விட்டுப் பிரிந்தார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (14.01.2023) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இல. 127, வைத்தியசாலை வீதி , யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல் :
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**
127, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.


## பக்க வடிவமைப்பாளர் தேவை!



**பத்திரிகை பக்க வடிவமைப்புக்கு ஆட்கள் தேவை**

**Adobe InDesign, Adobe Photoshop**
**தெரிந்தவர்கள் - பத்திரிகை துறையில் அனுபவம் உள்ளவர்கள் (ஆண், பெண் இருபாலாரும்) விண்ணப்பிக்க முடியும்.**

விண்ணப்பங்களை
**eelanaduweekly@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது
**ஈழநாடு, இல. 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.